மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 3 | 15 - 4 - 55 | இதழ் 24

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

வெறுங்காவலில் போடக் கடுங்காவலில் புகுந்தார்

1938-ஆம் ஆண்டில், ஆச்சாரியாரின் கட்டாய இந்தி நுழைப்பை எதிர்த்துப் போராட்டம் நடத்தப்பட்டபோது, அறிஞர் அண்ணா அவர்கள் அதில் ஈடுபட்டுச் சட்டவரம்புக்கு மீறிய சொற்பொழிவாற்றினார் என்று ஆச்சாரியார் ஆட்சியால் குற்றச்சாட்டப்பட்டு, நான்கு திங்கள்கள் வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். அவர் சென்னைப் பெருஞ்சிறையில் வைக்கப்பட்டிருந்தார்.

அறிஞர் அண்ணா அவர்கள் சிறைபுகுமுன்னரே இந்தி எதிர்ப்புத் தொண்டர்களும், தலைவர்களும் பலராகச் சிறைபுகுந்திருந்தனர். நண்பர்கள் பலர் இருந்த போதிலும், உண்ணுவதும், உறங்குவதும், உரையாடுவதும் ஆன செயல்களிலேயே பொழுதெல்லாம் கழிவது அண்ணாவுக்கு ஊக்கத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்க வில்லை. எனவே இரண்டாம்வகுப்பு வெறுங்காவல் தண்டனையைக் கடுங்காவல் தண்டனையாக மாற்றிக்கொள்வதன்மூலம் ஊக்கமும், மனக்கிளர்ச்சியும் பெறலாம் என்று கருதித் தமக்குக் கடுங்காவல் தண்டனை கொடுக்கும்படி உரிய அதிகாரிகளை அறிஞர் அண்ணா அவர்கள் விரும்பிக் கேட்டுக்கொண்டார். அதிகாரிகளும் அவ்வாறே சில நாட்கள் கழித்து அளித்தனர்.

அறிஞர் அண்ணாவின் போக்கு பலராலும் பாராட்டப்படவேண்டியதாக இருந்ததோடு மட்டுமல்லாமல், சிறையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியால், மிக மேம்பாடுற்றதாகவும் கருதப்படவேண்டியதாக மாறிற்று.

அறிஞர் அண்ணா அவர்கள் என்று இரண்டாம் வகுப்புக் கடுங்காவல் தண்டனையை விரும்பி ஏற்றுக்கொண்டார்களோ அதே நாளில் திருவாசகமணியாக விளங்கும் தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் முதல்வகுப்பு வெறுங்காவல் தண்டனையைத் தாங்கிக்கொள்ளமுடியாமல், மன்னிப்புக் கேட்டுக்கொண்டு வெளியேற விரும்பினார்.

அறிஞர் அண்ணா அவர்கள் வெறுங்காவல் தண்டனையை வெறுத்துக், கடுங்காவல் தண்டனையை ஏற்றுக், கடுங்காவலுக்குரிய உடுப்புகளை அணிந்துகொண்டு சிறையிலுள்ள ஒரு வாயிலிலே நுழையும்போது, தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் மன்னிப்புக் கேட்டுக்கொண்ட நிலையில் வீட்டுக்குப்போக வெளியேறினார். இருவரும் வாயிலில் ஒருவரையொருவர் கண்டுகொண்டனர். அறிஞர் அண்ணா அவர்கள் அவரைப்பார்த்துக் கேலிச்சிரிப்பு சிரிக்க, அவர் அசட்டைச் சிரிப்பு சிரித்தாராம். அண்ணா அவர்கள் அவரைப் பார்த்து, அவரைப்போலவே மன்னிப்புக்கேட்டுக்கொண்டு முன்னரே வெளியேறிவிட்ட ஒருவர் பெயரைச்சொல்லி, அவர்தான் வெளியே அவருக்காகக் காத்துக்கொண்டிருப்பார், வேறு யாரும் இருக்கமாட்டார்கள் வரவேற்க என்று சிரித்துக்கொண்டே கூறி அனுப்பினார்களாம். அறிஞர் அண்ணா கூறியதுபோல மன்னிப்புக் கேட்டுக்கொண்டவரை, முன்னரே மன்னிப்புக் கேட்டுக்கொண்ட ஒருவர்தான் வரவேற்று நின்றாராம்!

மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

15 - 4 - 55 வெள்ளிக்கிழமை

அரும்பும் எதிர்ப்புணர்ச்சி

வடநாட்டவர்கள், தங்களுடைய ஆதிக்கத்தைத் தென்னாட்டில் நிலைநாட்ட, மத்திய அரசாங்கத்தின்மூலம் எடுத்துக்கொண்டுள்ள பல்வேறு நடவடிக்கைகளில், இந்தியை இந்தியாவின் அரசியல் மொழியாகவும், தேசிய மொழியாகவும், பொதுமொழியாகவும் ஆக்க வேண்டும் என்பது முக்கியமான ஒன்றாகும்.

இந்தி திராவிடத்தைப் பொறுத்தவரையில் எந்த வகையிலும் தேவைப்படாத ஒருமொழி என்பதை அடிக்கடிச் சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

இந்தி இந்தியாவின் 'தேசியமொழி' என்று என்று கூறுவது, பொருந்திவராத - பொருளற்ற ஒரு கூற்றாகும் என்பதையும் முன்பே நாம் உணர்த்திவந்துள்ளோம். இந்தி வேண்டுமானால், இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள வடநாட்டின் சிற்சில பகுதிகளுக்குத் தேசியமொழியாக இருக்கலாமே ஒழிய, அது இந்தியத் துணைக்கண்டம் முழுமைக்கும் எப்படித் தேசியமொழி ஆகிவிடும் என்பது தெரியவில்லை! தமிழகத்துக்குத் தமிழும், ஆந்திரத்துக்குத் தெலுங்கும், மராட்டியத்துக்கு மராட்டியும், வங்கத்திற்கு வங்கமொழியும்தான் தேசிய மொழிகளாக இருக்கமுடியுமே அல்லாமல், இந்த நிலப்பகுதிகளுக்கு (தேசியப்பகுதிகளுக்கு)த் தொடர்பற்ற இந்தி எப்படித் திடீரென்று தேசியமொழி ஆகிவிடும்? ஒரு நாட்டிற்குப் பொதுமொழியும், அரசியல் மொழியும் வேண்டுமானால் மாறுந்தன்மை கொண்டவைகளாக இருப்பதில் வியப்பில்லை; ஆனால் ஒரு நாட்டிற்குத் தேசியமொழியே மாறும் என்றால், அது வியப்புக்குரிய வெற்றுப்பேச்சு அல்லவா?

இன்று, வடவர் ஆதிக்கம் கொண்ட இந்தியப்பேரரசு இந்தியத் துணைக்கண்டம் முழுவதையும் ஆளுகிறது என்ற காரணத்துக்காக இந்தி தேசிய மொழியாக்கப்படுகிறது என்றால், வருங்காலத்தில் சீனர்கள் இந்தியாவைப் பிடித்து ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்று ஒப்புக்கு வைத்துக்கொண்டு பார்க்கும்போது, இந்தியாவின் தேசியமொழி இனி சீனமொழிதான் என்று அவர்கள் கூறுவார்களேயானால் அதுபொருத்தமுடைய கூற்றாகும் என்று எந்தக் காங்கிரசுத் தோழராவது ஒப்புக்கொள்வார்களா? ஒருகாலும் ஒப்புக்கொள்ள மாட்டார்களே! எப்படிச் சீன மொழியும், ரசிய மொழியும், ஆங்கில மொழியும், பிரெஞ்சு மொழியும் தமிழகத்தின் — திராவிடத்தின் தேசியமொழிகளாகமாட்டாவோ, அப்படித்தானே இந்தி மொழியும் தமிழகத்திற்கு— திராவிடத்திற்குத் தேசியமொழி ஆகாது.

தேசியமொழி என்பது நாட்டிற்குரிய மொழியாய், யாருடைய வற்புறுத்தலுக்கும் கட்டுப்படாமல், இயற்கையாய் வரலாற்றுமுறையில் வளர்ந்துவரும் மொழியாகும். ஒரு மனிதனுக்கு எப்படி இரண்டு தாய் இருக்கமுடியாதோ, அப்படி ஒருவனுக்கு இரண்டு தேசிய மொழிகள் இருக்கமுடியாது? தேசியமொழி என்பது, ஒரு நாடு திடீரென்று ஒருமொழியை ஏற்றுக்கொண்டு திடீரென்று அதனை விட்டுவிடும் தன்மை கொண்டது அல்ல. நிலத்திற்குரிய தேசியமொழி ஒன்று இருக்கிறது என்றால், அந்த நிலத்திற்கு வேறோர் மொழி திடீரென்று தேசியமொழியாகிவிடமுடியாது, இருக்கும் மொழியை வரும் ஆதிக்க மொழி மெல்லமெல்ல விழுங்கி, இருக்கும் மொழியை அடியோடு அழித்து, அதன் சுவடுதெரியாமல் செய்து, அந்த நிலத்திற்குரிய மொழியாகத் தன்னைத்தானே ஆக்கிக்கொண்டு விளங்கும் போதுதான், அது அந்த நிலத்திற்குரிய மொழியாக அதாவது 'தேசியமொழியாகக் கருதப்படும். இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளையும் அழித்துவிட்டு, இந்தியே இந்தியா முழுமைக்கும் உரியமொழியாக ஆகும் காலத்தில் வேண்டுமானால், இந்தி இந்தியாவின் 'தேசியமொழி' என்று பெயர்பெறலாமே யல்லாமல், அதுவரையில், அது வடநாட்டின் சிற்சில பகுதிக்குத்தான் தேசியமொழியாகும்; பிற பகுதிகளுக்கு அது ஆதிக்கமொழியாகத்தான் காட்சியளிக்குமேயன்றி, தேசியமொழி ஆகாது. இந்த உண்மைகளையெல்லாம் நன்கு உணர்ந்து பார்ப்பவர்கள், "இந்தி இந்தியாவின் தேசியமொழி" என்று ஒருநாளும் உளறிக்கொட்டமாட்டார்கள்!

இந்தியை அரசியல் மொழியாகவும் பொது மொழியாகவும் ஏற்றுக்கொள்ளலாமா என்றால், அது பயன்படாத தேவையற்ற செயல் ஆகும். இந்தியத் துணைக்கண்ட ஆட்சியாயினும் சரி, திராவிடக் கூட்டாட்சி ஆயினும் சரி அகில உலகப் பொதுமொழியாக இருக்கிற ஆங்கிலமே இங்கும் பொதுமொழியாக இருக்கலாம். அந்தந்த வட்டாரத்து மொழிகள் ஆங்காங்கு அரசியல் மொழிகளாக இருக்கலாம்; இந்தி எந்தவகையிலும் தேவைப்படுவது அல்ல.

மேற் கூறப்பட்ட காரணங்களை அடிப்படையாகக்கொண்டுதான், தி. மு. கழகம் இந்தி ஆதிக்கத்தை முழுமூச்சுடன் எதிர்க்கிறது. தென்னாட்டு அரசுகள் இன்றில்லாவிட்டாலும், வருங்காலத்தில் என்றாவது ஒருநாள் இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கத்தான் போகின்றன என்பதை நாம் அடிக்கடி உணர்த்தி வருகிறோம். காங்கிரசுக் கட்சியினர் ஆட்சிப் பலகையில் வீற்றிருக்கும்போதே, இந்திமொழி ஆதிக்கத்தின் நிலைமை அவர்களால் உணரப்பட்டு, வெறுக்கப்படுகிறது என்றால் காங்கிரசுக்கட்சி, நாளடைவில் கரைந்து கரைந்து பிறகட்சி மனப்பான்மையினர் ஆட்சிப்பலகையில் ஏறும் போது எத்தகைய நிலை ஏற்படும் என்பதை யாரும் எளிதில் ஊகித்தறிந்துகொள்ளலாம். மைசூர் முதலமைச்சர் தோழர் அனுமந்தையா அவர்கள் இந்திமொழி ஆதிக்கத்தையும் வடவர் ஆதிக்கத்தையும் வெறுத்துப் பேசுகிற பேச்சுக்களை அடிக்கடிக் காண்கிறோம். எல்லாவற்றையும்விட வியப்புக்குரிய நிகழ்ச்சி என்னவென்றால், ஆச்சாரியாரிடம் 'அனுமார்' என்ற பட்டத்தை அவ்வப்போது பெற்றுவந்த சென்னைக் கல்வி அமைச்சர் தோழர் சி. சுப்பிரமணியம் அவர்கள் இந்தி ஆதிக்கம் பற்றிய எதிர்ப்புணர்ச்சியை, முழுக்க முழுக்க அல்ல, ஓரளவுக்குக் காட்ட முன் வந்திருப்பதுதான்.

அகில இந்திய அலுவல்களுக்கான போட்டித் தேர்வுகளுக்கு இந்தி மொழியையே பயன்படுத்த மத்திய அரசாங்கம் வெளியிட்டுள்ள கருத்து பற்றிச் செய்தித்தாள் நிருபர்கள், சென்னைக் கல்வி அமைச்சர் தோழர் சி. சுப்பிரமணியம் அவர்களைக் கேட்க, அவர் அந்தக் கொள்கையை ஒப்புக்கொள்ள இயலாது என்று சென்னை அரசாங்கச் சார்பாகக் கூறியதோடு, அந்தப்படிக்குச் சென்னை அரசாங்கம், தன்னுடைய கருத்தை மத்திய அரசாங்கத்துக்கு அறிவித்துவிட்டது என்றும் கூறியுள்ளார். மேலும் சொல்லும்போது, "இந்திமொழி பேசப்படாத வட்டாரமக்களின் நிலைக்கு இந்தக் கொள்கையால் குந்தகம் ஏற்படக்கூடாது என்று நினைக்கிறேன்" என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்தி ஆதிக்க எதிர்ப்பு உணர்ச்சி சென்னை அரசியலாரிடத்தில் இப்பொழுது சிறிதளவு அரும்புவது கண்டு, அந்த அளவுக்கு நாம் மகிழ்ச்சி கொள்கிறோம். வடநாட்டு மத்திய அரசாங்கம் இடும் எந்தக் கட்டளையையும், ஏறெடுத்துப் பார்க்காமல், வாய்பேசாமல் அப்படியே தலைமீது சுமந்து, பணியாற்றிவரும் பழக்கத்தைக்கொண்டிருந்த சென்னை அரசாங்கம், இந்தி ஆதிக்கத்தைப் பொறுத்து எதிர்ப்புணர்ச்சி காட்டியிருப்பது காலம் மாறுகிறது என்பதைக் காட்டும் அறிகுறியாகும்.

வளமற்ற இந்தியை அரசியல் மொழியாக்குவதற்கு மத்திய அரசாங்கத்தார் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளிலே, நூற்றிலே ஒரு பங்கு முயற்சியை, வளமுள்ள தமிழைத் தமிழகத்தின் அரசியல் மொழியாக்குவதற்குச் சென்னை அரசாங்கத்தார் எடுத்துக்கொள்வார்களேயானால் தமிழும் வளரும்; இந்தியும் அவ்வளவு எளிதாக ஆதிக்கம் செலுத்த வந்துவிடமுடியாதே!

இந்தியை வளர்க்க இந்திய அரசாங்கத்தார் இலட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் ரூபாய்களை ஒதுக்குகிறார்கள். அவற்றில் திராவிடம் கொடுக்கும் வரிப்பணமும் கலந்திருக்கிறது. ஆனால் தமிழை—திராவிடக் குழுமொழிகளை வளர்க்கத், தமிழகத்தின் — திராவிடத்தின் வரிப்பணம் பயன்படவில்லையே, முயற்சி ஏதும் எடுக்கப்படவில்லையே என்பதைக் கண்டு ஏங்கவேண்டியிருக்கிறது.

சென்னை அரசியலாரிடத்தில் அரும்பும் எதிர்ப்புணர்ச்சி மொட்டிலேயே கருகிவிடாமல், மேலும் மேலும் வளர்ந்து மலர்ந்து மணம் வீசுமாக! ●

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8—0
ஆறு திங்கள் ,,	3—0—0	
தனி இதழ் ,,	0—4—0	0—5—0

கருத்துக் கதிர்

பண்டிதரே பகருகிறார்

ஐந்தாண்டுத் திட்டத்தின் விளைவாக வடநாடு உயர்கிறது, தென்னாட்டிற்குப் பலனேதும் இல்லை என்று கழகத்தவர்கள் கூறும்போது ஏற்றுக்கொள்ளப் பின்வாங்குகிற மாற்றுக்கட்சித் தோழர்களுக்குப், பண்டித நேருவின் கூற்று ஒன்றைக் காணிக்கையாக வைத்தால், அவர்களுக்குத் தெளிவு பிறக்கக் கூடும் என்று கருதுகிறோம்.

அண்மையில் அலகாபாத் நகரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பண்டிதநேரு பேசும்போது,

"நான் சில நாட்களுக்கு முன்பு பக்காரா நங்கல் அணைக்கட்டைப் பார்வையிட்டேன். அங்கு 2500 பொறியர்கள் (என்சினியர்கள்) வேலைபார்க்கிறார்கள். அங்கு நடைபெறும் வேலைக்கு ஈடாக அகில உலகத்தில் ஒப்பிட்டுக்கூறுவதற்கு வேறொன்றில்லை, அவ்வளவு பெரிய அணைக்கட்டு அது. புதிய இந்தியாவின் நிறுவனத்திற்கு அது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். அதில் பத்து இலட்சம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தியாகும். அது வட இந்தியப் பகுதிகளுக்குப் பரவி பயன்படும். அதிலிருந்து திருப்பிவிடப்படும் சட்லச் ஆற்றின் நீர் இராசச்தானின் பாலைவனத்தைப் பசுஞ்சோலையாக்கும்."

(இந்து: 24-3-55)

என்று குறிப்பிட்டுள்ளார். அறிவை அடகு வைக்காதவர்கள் அனைவரும், இதன்மூலம், கழகக்கருத்தின் உண்மையை உணர்ந்து கொள்ளலாம்.

ஃ ஃ ஃ

அவர்கள் போக்கே அப்படித்தான்

கம்யூனிச்டுக் கட்சியினர் ஆந்திராவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெருவாரியாகத் தோல்வியுற்றதற்குப் பிறகு, தான் தோல்வியுறுவதற்குக் காரணம் என்ன என்பதை விளக்கி அந்தக் கட்சி அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளது.

"நிலபிரபுக்கள் முதலாளிகள் ஆகியவர்களுக்குத் தற்போதைய சமூக அமைப்பில் இன்னும் ஆதிக்க நிலை இருந்துவருகிறது. இந்தச் சமூக அமைப்புக்கு ஆபத்து ஏற்படும்போலத் தெரிந்ததும் அவர்கள் தங்கள் சக்தியனைத்தையும் எவ்வளவுதூரம் பயன்படுத்துவார்கள் என்பதைக் குறைத்து மதித்துவிட்டோம். சாதாரண மக்களுடைய அரசியல் நம்பிக்கையிலும், உறுதியிலும் நாங்கள் அதிக நம்பிக்கை வைத்துவிட்டோம்."

(தி. ம. : 17-3-55)

என்பது அது தரும் விளக்கம். ஒன்றைக் குறைத்து மதிப்பிடுவதும் பிறகு தன்னைத் தானே திருத்திக்கொள்வதும் ஆன இந்த நிலைமை கம்யூனிச்டுக் கட்சிக்கு முதல் தடவையாக ஏற்பட்டதல்ல. அதனுடைய நடவடிக்கைகள் பெரும்பாலும் அப்படித்தான் இருந்துவருவனவாகும். தொடக்கத்தில் கம்யூனிச்டுக் கட்சி பாக்கிச்தான் பிரிவினை கூடாது என்று பிரச்னையைக் குறைத்து மதிப்பிட்டது; பிறகு பாக்கிச்தான் ஏற்படும்போது, பிரிவினை தேவைதான் என்று கருத்தைத் திருத்திக்கொண்டது. அதுபோலவே தனித் திராவிடநாடு கூட்டாட்சியைக் குறைத்து மதிப்பிட்டுக்கொண்டிருக்கும் கம்யூனிச்டுக் கட்சி, வருங்காலத்தில் திராவிட நாடு தனி நாடாகப்பிரியத்தான் வேண்டும் என்று கருத்தைத் திருத்திக்கொண்டாலும் நாம் அதுகண்டு வியப்படைவதற்கில்லை. அது அக்கட்சியின் இயல்பு!

ஃ ஃ ஃ

சுயமரியாதைத் திருமணம்

மூடநம்பிக்கைகளாகவும் குருட்டுப் பழக்க வழக்கங்களாகவும் கருதப்படும் மதச்சடங்குகளை நீக்கிவிட்டுக், காலத்திற்கேற்ற முறையில், பகுத்தறிவுக்கேற்ற வகையில், முடிந்த அளவுக்குச்சீர்திருத்த முறையில் செய்யப்படும் சுயமரியாதைத் திருமணங்களையெல்லாம் செல்லுபடியாகாதவை என்று இன்றுள்ள சட்டம் தீர்ப்பளிக்கிறது. இன்றுள்ள சர்க்கார், மதச்சார்பற்ற சர்க்கார் என்று தன்னைச் சொல்லிக்கொண்டாலும், உள்ளபடியே இது மதவழிச்சர்க்காரேயாகும். ஒரு குறிப்பிட்ட மதத்தை முழுக்க முழுக்கச் சார்ந்த

சர்க்கார் என்றில்லாவிட்டாலும், எல்லர் மதங்களையும் தழுவி நடக்கும் சர்க்காரேயாகும். மதச்சார்பற்ற மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முன்வராத ஒருதலைச்சார்பான சர்க்காரேயாகும். திருமணம் எப்படி நடக்கவேண்டும் என்று மதக்காரர்கள் வகுத்துக் கொடுத்துள்ள சட்டங்களைத்தான் அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறதேயல்லாமல், சுயமரியாதைக் காரர்களின் சீர்திருத்தத் திருமணத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. சுயமரியாதைத் திருமணங்களைச் செல்லுபடியாகச் செய்யும் வழி வகைகளைக் காணும் முயற்சியும், கிளர்ச்சியும் ஒருபக்கம் நடைபெற்றுக்கொண்டிருந்த போதிலும், அவைகளை செல்லுபடியாகவைக்கும்காலம் வரையில், **சுயமரியாதைப் பதிவுத் திருமணங்களாக** எல்லாச் சீர்திருத்தத் திருமணங்களையும் செய்யவேண்டும் என்று சீர்திருத்த மணமக்களை வற்புறுத்துகிறோம். சுயமரியாதைத் திருமணம் செய்துகொண்டு, பல ஆண்டுகள் ஆகி இதுவரையில் ரிஜிஸ்ராரிடம் பதிவு செய்துகொள்ளாதவர்களாக இருந்தாலும்கூட, உடனடியாகப் பதிவு செய்துகொள்வது, வருங்காலத்தில் சொத்து, உரிமை, வாரிசு ஆகியவைகளிலே சிக்கல்கள் ஏற்படாமலிருக்க உதவும். நடந்த திருமணங்களாயினும் சரி, நடக்கப்போகும் திருமணங்களாயினும் சரி சீர்திருத்தத் திருமணங்களெல்லாம் **சுயமரியாதைப் பதிவுத்திருமணங்களாக** இருப்பதாக!

ஃ ஃ ஃ

ஆட்சியின் அவலட்சணம்

இந்த இந்தியத் துணைக்கண்டத்தைக் கட்டி ஆளும் உரிமையும் திறமையும் தங்களுக்குத்தான் உண்டு என்றும், வேறு எந்தக் கட்சியார்க்கும் ஆளத்தெரியாது என்றும் ஓயாது வாய்த்தம்பட்டம் அடிக்கும் காங்கிரசு ஆள வந்தார்களின் அவலட்சண ஆட்சிப் போக்கை நூற்றுக்கணக்கான எடுத்துக்காட்டுகளால் விளக்கிக்காட்டலாம். இந்திய அரசாங்கம் அரிசிக் கொள்முதல் விற்பனையில் மொத்தம் **ரூ 45 கோடி நட்டம்** ஏற்படும்படி நடந்து கொண்டிருக்கிறது என்பதை அண்மையில் எல்லோரும் அறிந்துகொண்டோம். இந்திய சர்க்கார், தவறான கணக்கு எழுதியதன் காரணமாகச், சம்மு—காச்மீர் சர்க்காருக்குத் தெரியாத்தனமாக ரூ. 72 இலட்சம் மிகவாகக் கொடுத்துவிட்டிருக்கிறது. இப்படித் திறமையோடு நிருவாகம் செய்யமுடியாத பரந்த நிலப் பரப்பைக் கொண்டிருக்கும் மத்திய ஆட்சியின் கீழே திராவிடம் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் சிக்கிக்கிடந்து, சீரழியவேண்டி நேரிடுமோ தெரியவில்லை!

ஃ ஃ ஃ

பக்தி வெறி

"கடவுள் நம்மிடை காணிக்கை எதிர்பார்க்கிறார்; காணிக்கை தரவேண்டியது நமது கடமை; காணிக்கை தந்தால் வேண்டிய பலன்களெல்லாம் கிட்டிவரும்" என்று கூறி மதவாதிகள் பக்திநெறியைப் பரப்பிவருகின்றனர். இது மூடநம்பிக்கை; இதனால் மனிதன் அறிவிழந்து கீழ்நிலையடைகிறானே தவிர உருவான பலன் ஏதும் ஏற்படுவதில்லை என்று பகுத்தறிவுநெறி கூறுகிறது. பக்திநெறியில் நம்பிக்கைவைத்தோர் தங்கள் தங்கள் விருப்பத்திற் கேற்றவாறெல்லாம் 'கடவுளு'க்குக் காணிக்கை செலுத்திப் பலன் பெற போட்டிபோட்டுக்கொண்டு ஒருவரை ஒருவர் முந்துகின்றனர்.

பக்திநெறி எப்படிப்பட்ட வெறிபிடித்த நிலைக்கு மனிதனைக் கொண்டுபோய்விடுகிறது என்பதற்கு அண்மையில் நடந்த இரண்டு நிகழ்ச்சிகளே போதுமான எடுத்துக்காட்டுகளாகும். வடநாட்டில், சுமார் முப்பது வயதான பெண்ணை ஏமாற்றி அழைத்துக் கொண்டுபோய், வெள்ளைப் புடவை கொடுத்து உடுத்திக்கொள்ளச்செய்து, அப்பெண்ணைக் 'கடவுளு'க்குப் பலியிட்டிருக்கிறார்கள் சில பக்தகோடிகள். போலீசுக்காரர்கள் அந்தப் பக்தகோடிகளுக்கு 'வரம்' அளிக்கத் தேடிக் கொண்டிருக்கிறார்களாம். இது ஒன்று. மற்றொன்று தென்னாட்டில் நிகழ்ந்திருக்கிறது. கோவை மாவட்டத்தைச் சேர்ந்த ஒக்கிலிபாளையம் என்ற சிற்றூரில், 35 வயதான அரங்கசாமி என்பவர் கிட்டன் என்ற மாடு மேய்க்கும் சிறுவனைக் கொடுவாளால் வெட்டிக் கடவுளுக்குக் காணிக்கையாகத் தந்திருக்கிறார். உடனே போலீசுக்காரர்கள் 'பிரசன்னமாகி' "பக்தா! இந்தா பரிசு! இந்த விலங்குகளை மாட்டிக்கொள்!" என்ற முறையில், அவருக்கு விலங்கிட்டுக், கொலைவழக்கு ஒன்று பதிவு செய்துள்ளார்கள். போலீசுக்காரர் கேட்டதற்கு "என் பிரார்த்தனையை நிறைவேற்றத்தான் கொலைசெய்தேன்" என்று பதிலிறுத்தாராம் அந்த 'நவீனக் கோட்புலி நாயனார்'! மதமூடநம்பிக்கை, இத்தகைய வெறிச்செயல்களுக்குக் காரணமாக இருக்கும்போது அத்தகைய மூடநம்பிக்கைகளைப் போற்றிப் புகழ்கின்றனரே, மதவாதிகள்! அவர்களை என்னென்று சொல்லுவது?



(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

சகுந்தலா கண்விழித்தபொழுது, காலை வெய்யில் அவள் படுக்கைக்கருகில் வந்துவிட்டது. எதிர்ச்சுவற்றிலிருந்த கடிகாரத்தில் சிறியமுள் எட்டை நெருங்கிக்கொண்டிருந்தது. நீண்டநேரம் எப்படித் தூங்கிக்கொண்டிருந்தோமென்று அவளுக்கே புரியவில்லை. அறையை விட்டு வெளிவந்தபொழுது, டாக்டர் சஞ்சீவி வெளிக்கிளம்பிக்கொண்டிருந்தார்.

"நீண்ட தூக்கம் போலிருக்கிறதே!" என்று சஞ்சீவி கேட்டார். கலைந்திருந்த தலைமயிரை ஒதுக்கிக்கொண்டு, சகுந்தலா புன்னகை செய்தபடி நின்றாள்.

கடிகாரத்தில் மணி எட்டடித்தது. டாக்டர் சஞ்சீவியின் கார் வாசற்படியில் வந்து நின்றது. டாக்டர் சஞ்சீவி தனது கோட்டை எடுத்து மாட்டிக்கொண்டு, ஒருதடவை தனது பை முதலானவற்றை நன்றாகப் பார்த்துக்கொண்டார், "ஒன்றும் மறந்துவிடவில்லையே!" என்று.

"நாழியாகிவிட்டது! நான் போகிறேன்! நேற்றுத் தலைவலி யென்று உட்கார்ந்திருந்தாயே! இப்பொழுது எப்படியிருக்கிறது?" வாசற்படியில் நின்றுகொண்டு, சஞ்சீவி கேட்டார்.

"சிறிது நேரந்தான், அப்புறம் சரியாகிவிட்டது" சகுந்தலா பதிலளித்தாள்.

"வீட்டிலேயே உட்கார்ந்திருக்கக்கூடாது. உன் வயதில் ஓடியாடியபடி இருக்கவேண்டும்!" டாக்டர் சஞ்சீவி விரைந்து சென்றார். நேரம் வீண்போவதுபோல அவருக்குத் தோன்றியது.

"எவ்வளவு அன்புடன் அவர் நடந்துகொள்ளுகிறார்" டாக்டர் சஞ்சீவியைப்பற்றி சகுந்தலா நினைத்துக்கொண்டாள். முதலில் கடுமையுடனும், கோபத்துடனும் காணப்பட்ட அவர், அமைதியும், பொறுமையும் மிகுந்தவராகக் காணப்பட்டார். நான்கு, ஐந்து வாரங்களுக்குமுன், இந்த வீட்டிற்கு வரவேண்டுமென்று டாக்டர் தங்கம் கூறியபொழுது, தங்கத்திற்கு முதலில் திகைப்புதான் வந்தது. ஆனால் அப்பொழுதிருந்த மனக்குழப்பத்தில் அவள் அதைப்பற்றி மிகவும் கவலைப்படவில்லை. வந்த புதிதில்கூட, தங்கத்தைப் பற்றிய கவனம் டாக்டர் சஞ்சீவிக்கு இருப்பதில்லை. பின்பு தங்கத்தைப்பற்றி அக்கறையுடன் கேட்பதும், அவளுக்கு வேண்டியவற்றைக் கவனிக்கும்படிச் சொல்வதும், அவருடைய நல்ல பண்பைக் காட்டின. அவர் பேசும் பொழுதும், அவர் வைத்துள்ள அன்பும் ஆதரவும் தெரியாமற்போகவில்லை. உண்மையில் டாக்டர் சஞ்சீவி, டாக்டர் தங்கம் முதலானவர்கள் தன்னிடம் காட்டுவது அன்பா, அல்லது ஒரு நோயாளியிடம் ஒரு டாக்டர் காட்டும் கவனமா அல்லது ஒரு ஆதரவற்றவளிடம் காட்டப்படும் இரக்கமா என்பது சகுந்தலாவிற்குப் புரியவில்லை. அத்தகைய நல்லவர்கள் சிலர் இருப்பதால்தான், சமூகத்தில் பலர் இருக்கமுடிகிறது!

காலைச் சிற்றுண்டி அருந்திவிட்டு வெளி வந்தபொழுது, தோட்டக்காரன் புல்லைச் செதுக்கிக்கொண்டிருப்பதைச் சகுந்தலா பார்த்தாள். தோட்டத்திற்குள் போகலாமென்று கீழிறங்கிவந்ததும், தோட்டத்தில் முதல் நாள் நிகழ்ந்த சம்பவம் அவள் நினைவுக்கு வந்தது. "சே! எவ்வளவு அசட்டுத்தனமாக நடந்துகொண்டோம்" என்று வெட்கத்துடன் அந்த இடத்தைப் பார்க்கவிரும்பா

மல், சகுந்தலா திரும்பிவந்து உட்கார்ந்தாள். "தான் மிகவும் துயரத்துடன் இருக்கும் நேரத்தில்தானு அவர் வரவேண்டும்? அவர் என்ன நினைத்துக்கொண்டாரோ?" என்றெல்லாம் சகுந்தலா கேட்டுக்கொண்டாள். தன்னைச் சுற்றிலும் இருப்பவர்கள் தன்னை ஒரு குழந்தையைப்போல நடத்துவதாகத் தோன்றியது. சகுந்தலாவுக்கு அது கோபத்தைத் தந்தது.

சகுந்தலா யோசித்தவண்ணம் உட்கார்ந்திருக்கும்பொழுது, வீட்டிற்குள் யாரோ வருவதுபோன்ற சத்தம் அவள் காதில் விழுந்தது. அவள் திரும்பிப் பார்த்தபொழுது, வாயற்படியில் குலசேகரன் நிற்பது தெரிந்தது. ஒருகணம் திகைப்பு வந்தது, அந்தச் சமயத்தில், உலகத்தில் யாரையாவது பார்க்க வேண்டாமென்று நினைத்திருந்தால், அது குலசேகரனைத்தான் இருந்திருக்கமுடியும். அந்த இடத்தைவிட்டு போய்விடலாமென அவள் எழுந்தாள். அதற்குள் குலசேகரன் உள்வந்துவிட்டான். ஏதும் புரியாமல், சகுந்தலா உட்கார்ந்துவிட்டாள். குலசேகரனின் முகத்தைப் பார்க்கவும் அவளால் முடியவில்லை. தரையைப் பார்த்துக்கொண்டு, குனிந்தபடி அவள் உட்கார்ந்திருந்தாள்.

குலசேகரனும் குழப்பத்துடன் உட்கார்ந்திருந்தான். பின் நீண்டநேரம் ஆகியும், இருவரும் ஏதும் பேசவில்லை. குலசேகரன் எழுந்து போய்விட்டான். தப்பித்தோமென்று சகுந்தலா எழுந்து சென்றாள்.

மாலை டாக்டர் சஞ்சீவி இருக்கும்பொழுது குலசேகரன் மீண்டும்வந்தான். காலையில் இருந்த குழப்பம் நிலவவில்லை. வழக்கம்போல் அவன் பேசிக்கொண்டிருந்தான். சகுந்தலா சற்று தூரத்தில் அமர்ந்திருந்தாள். பக்கத்திலிருப்பவர்கள் என்ன பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை, அவள் கவனிக்கவில்லை. கடைசியில் தன்னைப்பற்றிய பேச்சு அவள் காதில் விழுந்தது.

"சகுந்தலாவின் வழக்கு இன்னும் எவ்வளவு நாட்கள் பிடிக்கும்?" சஞ்சீவி கேட்டார்.

"இன்னும் ஒருவாரத்தில் முடிந்துவிடும்" குலசேகரன் பதிலளித்தான். "இன்னும் சகுந்தலா விசாரிக்கப்படவேண்டியதுதான் பாக்கி."

"எப்படியிருக்கிறது,"

"வழக்கு நிற்காது. நிச்சயம் விடுதலை செய்துவிடுவார்கள்."

"சகுந்தலா குற்றம் செய்திருப்பாளென்று யாரும் சொல்லமுடியாது. அவள் சிறு குழந்தையைப் போலிருக்கிருள். அவளாவது குற்றம் செய்யவாவது,"

"நாளையதினம் சகுந்தலா விசாரிக்கப்படுவாள். அவள் எந்த அளவு தயாராக இருக்கிருள் என்று தெரியவில்லை."

காலையில் குலசேகரன் அதற்காகத்தான் வந்திருக்கவேண்டும் என்று சகுந்தலா நினைத்துக்கொண்டாள்.

"அதற்காக முன்கூட்டி ஏதாவது சொல்லித்தரவேண்டுமா?"

"அதற்காக அல்ல; அவள் மனம் தெளிவாக, இருக்கவேண்டும். கேள்விகளை மாறி, மாறி கேட்டிடும்பொழுது, குழப்பமடைந்துவிடக்கூடாது. தவறுதலாகத் தருகிற பதில்களே ஆபத்தாக முடியும்."

"அப்படி என்ன கேள்விகள் வரும்?"

"வழக்கமான கேள்விகள்தான். கடற்கரைக்கு எப்பொழுது போனுய்? எதற்காகப் போனுய்? எப்படி விழுந்தாய்?"

"ஆனுல் சாதாரணக் கேள்விகளைக்கூட' கோர்ட்டில் கேட்கும்பொழுது, வளைத்து, மாற்றிக் கேட்கிருர்கள். கேள்வியைப் புரிந்துகொள்ளவே முதலில் யோசிக்கவேண்டியிருக்கிறது."

"கமலநாதன் அப்படியல்ல. அவர் கூடியவரை நேர்மையாக இருப்பவர்."

சகுந்தலா எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவளுடைய மனதில் நாளையதினம் நடைபெறப்போகும் விசாரணைக் கட்டம் வந்தது, கமலநாதன் கேள்விகளைக் கேட்கிருன். சகுந்தலா எவ்விதத் தயக்கமுமின்றி, பதிலளிக்கிருள், நீதிபதி "அந்தப் பெண், குற்றவாளியல்ல!" என்று தீர்ப்பு கூறுகிருர்

சகுந்தலா தனது கற்பனையில் கிடைத்த தீர்ப்பைப்பற்றி மகிழ்ந்துகொண்டிருக்கும் பொழுது, சிறிதும் எதிர்பாராத விதமாக ஒன்று நடந்தது. டாக்டர் சஞ்சீவியிடம் விடை பெற்றுக்கொண்டு, குலசேகரன் வெளியேறினுன். அவன் வெளியே போகும் பொழுது, சகுந்தலா உட்கார்ந்திருக்கும் பக்கம் நாற்காலியின் ஓரமாக வந்து. திடீரென்று சகுந்தலாவின் கையைப்பற்றி, அதில் ஒரு காகிதத்துண்டை வைத்துவிட்டுப் போனுன்.

சகுந்தலாவிற்கு என்ன நடந்ததென்றே புரிய வில்லை. கையில் பார்த்தால் ஒரு கடிதத் துண்டு இருப்பது மட்டும் தெரிந்தது.

சகுந்தலா சுற்றுமுற்றும் பார்த்தாள். பக்கத்தில் யாருமில்லை. மெதுவாகக் காகிதத் துண்டைப் பிரித்தாள். மிக அவசரமாக எழுதப்பட்டிருந்தது.

“உன்னைத் தனியே சந்திக்க முடியவில்லை. நாளை மாலை தோட்டத்தில் காத்திருப்பேன்.

உன்னைக் காதலிக்கும்

குலசேகரன்.”

ஒருகணம் திகைப்பும், மறுகணம் மகிழ்ச்சியும் அவள் முகத்தில் தாண்டவமாடின. அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. மீண்டும், பலதடவை அந்தக் கடிதத்தைப் படித்தாள்.

அந்தக் கடிதத்தை எழுத எவ்வளவு துணிவு இருந்திருக்கும்? அப்பாடா! ஆண்கள் மிகவும் பொல்லாதவர்கள்! கடிதத்தை எழுதினது மட்டுமல்ல, தனது கையைப் பிடித்து அதில் வைத்துவிட்டுப்போனாரே!

ஆனால் கடிதத்தைப் பார்க்கும்பொழுது கோபம் வரவில்லை. “உன்னைக் காதலிக்கும்” —அந்த எழுத்துக்கள் மிக அழகாக எழுதப் பட்டிருந்தன.

சகுந்தலா உள்ளே உட்கார்ந்திருக்கமுடியாமல் எழுந்து வெளிவந்தாள். நன்றாக இருட்டி விட்டது. வானத்தில் நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தன. “உன்னைக் காதலிக்கும்” —அந்த எழுத்துக்கள் சிதறுண்டு நட்சத்திரங்களாகக் கிடப்பதுபோலிருந்தது.

“ஆனால், எனக்கல்ல இது! எனக்கல்ல!” என்று சகுந்தலா தன்னையுமறியாமல் கூவினாள்.

“யாரது?” என்று டாக்டர் சஞ்சீவி உள்ளிருந்து கேட்டார்.

“ஒன்றுமில்லை” என்று சகுந்தலா உள் போய்விட்டாள்.

* * *

கமலநாதன் தனது அறையில் வழக்குக் கட்டுகளைப் புரட்டிக்கொண்டிருந்தான்.

“உங்களைத் தேடி யாரோ சாமியார் வந்திருக்கிறார்கள்?” என்று தங்கம் அறிவித்தாள். சகுந்தலா வழக்கு ஆரம்பமானதிலிருந்து, தங்கம் அதிகமாக அந்த அறைக்குள் வருவதில்லை. வழக்கைப்பற்றி கமலநாதனும் அவளுடன் பேசுவதில்லை. இருவரும் எதிர்கட்சிகளில் நின்று போராடுவதாக நினைத்துக் கொண்டார்கள்.

தங்கம் வெளியேறியதும் நித்தியானந்த சாமியார் கமலநாதன் அறைக்குள் வந்தார்.

“ஓ! சாமிகளா! வாருங்கள், வாருங்கள்!” என்று கமலநாதன் பயபக்தியுடன் உபசரித்தான். நித்தியானந்த சாமிகளென்றால், கமலநாதனுக்கு அவரிடம் தனி மரியாதையும், மதிப்பும் இருந்தது.

“முருகா! முருகா!” என்று மேலே பார்த்து தியானித்துவிட்டு, நித்தியானந்தசாமிகள் அமர்ந்தார்.

“வேலையில் கருத்தாக இருக்கிற நேரத்தில், நான் தொல்லையாக வந்தேனோ?” சாமிகள் வினவினார்.

“இல்லை, இல்லை! போனவாரம் வடபழனியில் தங்கள் பிரசங்கம் இருந்தது, அதற்கு நான் வரமுடியவில்லை.”

“வடபழனியாண்டவன் கட்டளையால்தான் நான் இப்பொழுது வந்திருக்கிறேன். வடபழனிக்கு வரும் அன்பர்கள் வசதிக்காக, அங்கு ஒரு சைவச் சத்திரம் கட்ட அடியேன் நினைத்துள்ளேன். அதற்கு பெரியோர்கள் பலர் உதவுவதாக வாக்களித்துள்ளார்கள். தங்களைப்போன்ற பெரியவர்கள் உதவியும், திருமுருகனின் கடாட்சமும் இருந்தால், அது நிறைவேறும். இன்று மாலை, அதற்காக திருமலாச்சாரியார் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெறப்போகிறது. அதற்கு வரும்படித் தங்களை அழைத்துப்போகவே அடியேன் வந்துள்ளேன்.”

“இன்று மாலை நான் வரமுடியுமோ என்னவோ?”

“ஏன், கோர்ட்டில் வேலை ஏதாவது முக்கியமோ?” சாமிகள் கேட்டார்.

“ஒரு வழக்கு, இன்று முக்கிய விசாரணையிருக்கிறது. அதற்கு நான் இருக்கவேண்டும்” சகுந்தலாவின் வழக்கைப்பற்றிக் கமலநாதன் சொன்னான்.

“கொடுமை! கொடுமை! பிள்ளையைக் கொன்றுவிட அந்தப் பாதகி எப்படித் துணிந்தாள்?”

“குழந்தை இறந்துகிடந்தது. அது எப்படி யிறந்தது என்று தெரியாது.”

" என்ன வேடிக்கை! அந்தப் பாவிகள் கொன்றிருக்கவேண்டும்" இத்தகைய கல் நெஞ்சினரைச் சுமந்துகொண்டு உலகம் எப்ப டித்தான் இருக்கின்றதோ! முருகா! முருகா!" என்று துறவி பெருமூச்செறிந்தார்.

" பெண்ணுக இருந்து, இவ்வளவுதூரம் அவள் குற்றங்கள் செய்வாள் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. வழக்கை எடுத்தபோது, முதலில் சாதாரணமாக இருந்தது. பின் பார்த் தால் அது வளர்ந்துகொண்டேபோகிறது," கமலநாதன், தன் எதிரில் இருக்கும் கட்டைப் பார்த்தான்.

" இந்தமாதிரி வழக்குகளை, அதிலும் இந்த வழக்கை அலட்சியமாக விட்டுவிடக்கூடாது. நன்ருகத் தண்டிக்கவேண்டும்."

" பாவம்! அந்தக் குற்றவாளி, ஒரு பெண் ணுயிற்றே!"

" எனக்குத் தெரியும். பெண் என்ருல் பரி தாபம் காட்டுதல் கூடாது, பரிதாபம் காட்டி ஞல் நாமே குற்றவாளியாகிவிடுவோம். பெண் கள் மாயப்பிசாசுபோன்றவர்கள். பட்டிணத் தார் சொல்லவில்லையா, 'பெண்ணுகிவந்த தொரு மாயப்பிசாசம்' என்று," நித்தியானந்த சாமி அந்த அடியைப் பாடிஞர்.

" எல்லோரையும் அப்படிச் சொல்லிவிட முடியாது."

" முடியாது, முடியாது! ஆனுல் இந்தப் பெண் ஒரு மாயப்பிசாசு போன்றவள். அவள் செய்த பாவகாரியத்துக்கு கடுந்தண்டனை தர வேண்டும் எல்லாம் லோக விவகாரம், நான் ஏன் தலையிடவேண்டும், முருகா! முருகா!" என்று நித்தியானந்தசாமிகள் எழுந்தார். கமலநாதன் அவருடன் வெளிவந்து வழி யனுப்பினுன்.

திரும்பிவந்து உட்காகர்ந்ததும், புதிதாக வந்த கட்டுகளைப் புரட்டிப் பார்த்தான். படித் துக்கொண்டுவரும்பொழுது, திடீரென்று எழுந்து உட்கார்ந்து, " நான் சிறிதும் எதிர் பார்க்கவில்லை!" என்று மீண்டும் அதைப் படித்துப் பார்த்தான்.

" பெண்ணுகிவந்ததொரு மாயப்பிசாசம்." நித்தியானந்த சாமிகள் சொல்லியது அவன் காதில் மீண்டும் ஒலித்தது. " சகுந்தலா, அவ் வாறு வந்த மாயப்பிசாசுதானே?" என்று தனக்குள் அவன் சொல்லிக்கொண்டான்.

* * *

சகுந்தலா குற்றவாளிக் கூண்டில் நின்ருள்.

" உண்மையை, முழு உண்மையை, உண் மை ஒன்றையே சொல்வதாக, சத்தியம் செய் கிறேன்." கோர்ட் உதவியாளர் சொன்னுர், சகுந்தலா அதை அப்படியே ஒப்பித்தாள்.

சகுந்தலா தலையைச் சற்று நிமிர்த்திப் பார்த்தாள். டாக்டர் தங்கம், டாக்டர் சஞ்சீவி உட்கார்ந்திருப்பது தெரிந்தது. பின் குல சேகரனைப் பார்த்ததும், மறுபடியும் தலையைத் தாழ்த்திக்கொண்டாள். கமலநாதன் எழுந்து அருகில் வந்தான்.

" உன் பெயரென்ன?"

" சகுந்தலா."

" ஊர்?"

" செங்கற்பட்டு,"

" சொந்த ஊர் அதுதானு?"

" ஆமாம்."

கமலநாதன் தனது குறிப்புப் புத்தகத்தைப் பார்த்துக்கொண்டு, குற்றவாளியைக் கூர்ந்து பார்த்தான்.

" சரி, உன் தகப்பனுர் பெயர்?"

" அருணுசலம் பிள்ளை."

" கணவன் பெயர்?"

" இறந்துவிட்டார்."

" எப்பொழுது இறந்தார்?"

" ஒரு வருஷத்துக்குமுன்."

" அவர் இறந்தபொழுது, நீங்கள் பக்கத்தில் இருந்தீர்களா?"

சகுந்தலா சற்றுத் தாமதித்தாள். "இருந் தேன்" என்று மெதுவாக பதில் வந்தது.

" என்ன வியாதியால் இறந்தார்?"

" காய்ச்சல்!"

" எவ்வளவோ வகைக் காய்ச்சல் இருக் கிறது. எவ்வளவு நாள் காய்ச்சல், எந்தவகை என்று உம்மால் குறிப்பிட்டுச் சொல்லமுடி யுமா? நோயின் சரியானபெயர் தெரியுமா?"

" தெரியாது."

" ஆனுல், இறந்தார் என்பது மட்டும் நிச்சய மாகச் சொல்லமுடியும்."

ஒரே கேள்வியை கமலநாதன் திருப்பித் திருப்பிக் கேட்டுக்கொண்டிருப்பது குலசேகர னுக்குப் பிடிக்கவில்லை. " கனம் நீதிபதி அவர் களே! நண்பர், ஒரே கேள்வியை திருப்பிக் கேட்கிருர், முதலில் அதற்குப் பதில் கிடைத்த பின்னும்!" என்று குலசேகரன் சொன்னுன்.

" கேட்பதற்குக் காரணம் இருக்கிறது. எதிரியின் கணவன் இறந்ததாகக் கூறுவது பொய்!" என்று கமலநாதன் சற்று உரத்தக் குரலில் சொன்னுன்.

எல்லோர் முகத்திலும் திகைப்புத் தட்டி யது. எதிர்பாராத குற்றச்சாட்டு! கமல நாதன் சுற்றிலும் பார்த்துவிட்டு, " எதிரியின் கணவன் இறந்திருக்கமுடியாது, ஏனென்ருல் எதிரிக்கு இன்னும் திருமணமே ஆகவில்லை!" என்று அமைதியுடன் சொன்னுன்.

அது பாறையொன்றை வெடிவைத்துத் தகர்ப்பதுபோல, குலசேகரனின் காதில் விழுந்தது. அவன் குற்றவாளிக்கூண்டைப் பார்த்தான். சகுந்தலா அங்கு நின்றுகொண் டிருக்கவில்லை, மயக்கம்போட்டு, விழுந்து விட்டாள்!

(தொடரும்)

மறு பரிட்சை

[இரா. செழியன்]

காட்சி 1

[எம்பளாய்மெண்ட் எக்சேஞ் ஆபீசின் வெளிப்புறம். சுவற்றில் 'Employment Exchange' என்ற பெயர்ப்பலகை இருக்கிறது. வேலை தேடிவந்தவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரை உயரும்பொழுது ஒருவர் பத்திரிக்கையை விரித்துப் படித்துக்கொண்டிருக்கிறார். மற்றும் நான்கு பேர்கள் கீழேகுனிந்து "தேவை" பகுதியை மிக மும்முரமாகப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். முடிவில் அந்த முதல் பக்கம் நான்கு பகுதிகளாகக் கிழிந்து நான்குபேர் கையிலும் வந்துவிடுகிறது.]

பத்திரிகை படிப்பவர் : ஏது தொல்லையாகிவிட்டது. கொஞ்சம் அசந்தால் ஆளையேப் பிச்சுப்பிடுங்கிக்கொண்டு போய்விடுவார்கள் போலிருக்கிறது. (அலுத்துக்கொண்டு, கிழிந்த பத்திரிக்கைகளை வாங்கிச் சேர்க்கிறார். கடைசித் துண்டு முத்துவிடமிருந்து வருகிறது.)

முத்து : பத்திரிக்கையைப் படிச்சா, என்னய்யா குறைஞ்சா போயிடும்?

பத்தி : குறைஞ்சுதான் போயிட்டுதே! எட்டு பக்கமா இருந்தது, ஆறு பக்கமா ஆயிட்டுது. இன்னும் நாலுபேர் பார்த்தால் இரண்டு பக்கத்துக்கு வந்துவிடும். பத்திரிக்கை பார்க்கிறது என்றால் இப்படியா? எல்லாரும் படிச்சு கிழிப்பாங்கன்னு பேரு. இவர்கள் கிழிச்சு படிக்கிறாங்க!

முத்து : (மறுபக்கம் திரும்பி) ஆசாமி மகாக் கஞ்சனாயிருக்கிறானே!

பத்தி : இவர் கர்ணன் வீட்டு தத்துப்பிள்ளை. இரண்டணாவுக்கு வழியில்லாமல்தானே, இன்னொருத்தர் முன்னே மண்டியிட்டு பார்க்கிறே!

(பாலசுந்தரம் ஒருகட்டுக் காகிதத்துடன் வருகிறான்.)

முத்து : பாலசுந்திரம்! பாலசுந்திரம்!

பாலு : யார் நீங்க!

முத்து : நான்தான் முத்து! அடையாளந் தெரியலை! இரண்டுபேரும் ஒன்றாகப் பத்து வருஷத்துக்கு முன்னால் பத்தாவதில் படிக்கவில்லை!

பாலு : ஆமா! பத்து வருசமாச்சுல்ல, அதுதான் தெரியவில்லை! அதுபோவுது. வேலை கிடைக்காமதான் இங்கே வந்தியா!

முத்து : ஆறுமாசமா அலையறேன். வேலையே கிடைக்கவில்லை. என்ன செய்யலாம்?

பாலு : ஆறுமாசம் பரவாயில்லையே! ஆறு வருசமா நான் அலைகிறேன். வேலை கிடைக்கவில்லை.

முத்து : உனக்குக்கூடவா இந்த நிலைமை! நான்தான் பத்தாவதுடன் நின்றுவிட்டேன். நீ பி. ஏ. படித்ததாகச் சொன்னார்களே! பி. ஏ. பட்டம் பெற்றுக்கூடவா வேலை கிடைக்கவில்லை?

பாலு : பி. ஏ. படித்தவுடன் இங்கு வந்து பெயரை ரிஜிஸ்டர் செய்தேன். என்னைப் போல ஆயிரக்கணக்கில் பி. ஏக்கள் குவிந்துகிடந்தார்கள். பி. ஏயைவிட பி. காம் படித்தால் வேலை கிடைக்கும் என்று சொன்னார்கள். சரி என்று பி. காம் படித்தேன். அப்புறம் பி. டி. படித்தேன். இப்பொழுது பி. எல் படிக்கிறேன்.

முத்து : பி. ஏ., பி. காம்., பி. டி., பி. எல்., அப்படிப் படித்தும்...

பாலு : வேலை மட்டும் கிடைக்கவில்லை. அப்போதைக்கப்போது வந்து பார்த்துப் போகிறேன், ஏதாவது வேலை வருகிறதா என்று!

முத்து ; இந்தக் கட்டு என்ன பாலு!

பாலு : நான் பெற்ற பட்டங்கள், சர்டிபிகேட்கள், எல்லாம்! படித்தது முழுவதும் வீண் என்று இப்பொழுது தெரிகிறது! சரி! உன்பாடு என்ன? பத்தாவது படித்தபிறகு நீ வேலைக்கேப் போகவில்லையா?

முத்து : பத்தாவது படித்தபிறகு, முதலில் ஏ. ஆர். பி. வேலை கிடைத்தது. சம்பளமும் கொடுத்து, டிரசும், சைக்கிளும் கொடுத்தார்கள். பாழாய்ப்போன சண்டை முடிந்ததும், என் வேலையும் முடிந்தது. ஒரு கோவாப்ரேடிவ் ஸ்டோரில் வேலை பார்த்தேன். நல்லாதான் இருந்தது. அந்த ஸ்டோர் டைரக்டரில் ஒருத்தன் ஸ்டோர் பணத்தை ஏப்பமிட்டான். அவனுக்கு ஒருவருஷம் தண்டனை கிடைத்தது, நான் இரண்டுவருஷம் வேலையில்லாமல் சுற்றினேன். அப்புறம் தாலுகா கச்சேரி, சினிமா கொட்டகை, இரும்புக் கடை, பள்ளிக்கூடம், பாங்கி இப்படி இடம் மாறிமாறி மூன்றுமாசம், நான்கு மாசம் வேலை பார்த்தேன். பின்பு வேலை கிடைக்கவில்லை. வேலையில்லாதவங்களுக்கெல்லாம் வேலை தேடித்தருகிற ஆபீஸ் ஒன்று இருக்கிறது என்று சொன்னார்கள். உடனே இதைத்தேடி நான் வந்தேன். இந்த ஆபீசுக்கு அலைஞ்சதைவிட்டு, நேராக வேலையைத் தேடி அலைந்திருந்தால்கூட வேலை கிடைத்திருக்கும் போலிருக்கிறது.

பாலு : என்ன செய்யறது, வேலை கிடைக்கிறது குதிரைக்கொம்பாக இருக்கிறது!

பாலு : குதிரைக்கொம்பாக என்ன, கழுதைக் கொம்பாக இருக்கிறது என்றே சொல்லு!

முத்து : பாலு! அடுத்த ஐந்து வருசத்தில் வேலையில்லாத் திண்டாட்டமே இருக்காதாமே! வேலையில்லாதவர்கள் யாரும் இருக்கமாட்டார்களாம்!

பாலு : இப்படியே போனால், ஐந்து வருஷத்துக்குள், இப்போ வேலையில்லையென்று திண்டாடுகிறவர்களெல்லாம் தீர்ந்து போய்விடுவாங்க, வேலையில்லாத் திண்டாட்டமும் தீர்ந்துவிடும்.

முத்து : எப்படியாவது ஒரு வேலை கிடைக்கணும்? என்ன செய்யலாம், பாலு, சொல்லு!

பாலு : என்னையேக் கேட்கிறியா? ஒன்றுமட்டும் சொல்லுகிறேன், கேள்! யாராவது, அத்திம்பேர், அம்மாஞ்சின்னு பெரிய வேலையிலிருக்கிறவங்களா பார்த்துப்பிடி! ரெகமெண்டேஷன் லெட்டர்களை வாங்கி வைத்துக்கொள்! வேலையிருக்கிற இடம், இல்லாத இடம் எல்லா இடத்தையும் அலசிப்பார்! தப்பித்தவறி வேலை கிடைச்சாலும் கிடைக்கும்!

(பாலு போகிறான். முத்து கிளம்புகிறான். ஒரு வயதானவர் தள்ளாடிக் கொண்டு வருகிறார், சிறு பையனை அழைத்துக்கொண்டு.)

முத்து : இந்தத் தள்ளாத வயதில் நீங்ககூட இங்கே வரவேண்டுமா? இனிமேல் உங்களுக்கு என்ன வேலை கிடைக்கும்? என்ன வேலைதான் பார்க்கமுடியும்? நாங்கள்தான் ஏதோ படித்துவிட்டு வேலைக்கு அலைகிறோம்!

கிழவர் : போட்டிக்காக வருகிறேன் என்று நினைத்துக்கொள்ளாதேடப்பா! இனிமேல் என்ன வேலைதேடி நான் பார்க்கப் போகிறேன்! வேலைக்கு ரிஜிஸ்டர் பண்ணி வைத்தால், வேலை கிடைக்க ஒரு பத்து பதினைந்து வருஷமாவது ஆகும்! இந்தப் பேரனை நேற்று பள்ளிக்கூடத்தில் சேர்த்துப் பேர் எழுதினேன்! அதோடு, இங்கேயும் வந்து இவன் பேரை எழுதிவைச்சால், இவன் படிச்சு முடியறதுக்கும் வேலை கிடைக்கிறதுக்கும் சரியா இருக்காதான்னு நினைச்சேன்!

காட்சி 2

(ரோடு சீன்.)

(ஒரு கட்டுக் கடிதங்களைக் கையில் அடுக்கிக்கொண்டு, விலாசங்களைப் படித்துக்கொண்டிருக்கிறான் முத்து.)

முத்து : மோகனரங்கம் பிள்ளை "மோகன விலாஸ்" மூன்றும் நம்பர், முதல்தெரு... ராஜா நாயுடு ரங்கப்பபிள்ளை கார்டன்ஸ்... கோபாலசாமி கொலைகாரன்பேட்டை...

(எதிரில் ஒருவர் வருகிறார்.)

ஒரு : எனக்கு ஏதாவது தபால் இருக்கிறதா?

(முத்து பேசாமல் தனது கடிதங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறான்.)

ஒரு : என்ன, போஸ்ட்மேன்! தபால் இருக்கான்னு கேட்டா, பதில்கூட சொல்லாமல் நிற்கிறே!

முத்து : போஸ்ட்மேனா? ஏனய்யா என்னைப் பார்த்தால், போஸ்ட்மென் மாதிரியா இருக்குது! ஐயோ! ஒரு போஸ்ட்மேன் வேலை கிடைச்சாக்கூட நான் நல்லா இருப்பானே!

ஒரு : போஸ்ட்மேன் இல்லையா? இவ்வளவு

கடிதங்களை வைத்திருக்கிறாயே யென்று கேட்டேன்.

முத்து : எல்லாம் சிபாரிசுக் கடிதங்கள்! பத்தாவதுவரைப் படிச்சிருக்கேன். வேலைக்காக அலைகிறேன்! சிபாரிசு கடிதங்களும் கொஞ்சம் நஞ்சமல்ல, கவர்னர் வேலையிலிருந்து, கடை வேலையாள்வரை எல்லா வேலைக்கும் எனக்கு சிபாரிசு செய்து கடிதங்கள் இருக்கின்றன! அதை வைத்துக்கொண்டு நானும் சுற்றிவருகிறேன்! இந்தக் கடிதத்தில் வைகுண்டம் அனுமந்தராயர், "கஜேந்திரவிலாஸ்" கருடன் கோயில் தெரு என்று போட்டிருக்கே அவர் வீடு எங்கே இருக்கிறது?

ஒரு : யார், லட்சுமி நாராயணு பாங்க் செக்ரடரியாக இருக்கிறாரே அவரா?

முத்து : ஆமாம் அவரேதான்!

ஒரு : அவரையாத் தேடிப்போகிறாய்? ரொம்பக் கஞ்சன், கல்நெஞ்சன் ஊர்த்தலையில் மிளகாய் அறைச்சி மாடிவீடு கட்டினவனல்லவா; பாங்கியில் வேலைன்னு ஆயிரம் கொடு, இரண்டாயிரம் கொடுன்னு கிம்பளம் கேட்கிற எமகாதகப் பேர்வழியாச்சே!

முத்து : என்னவோ, சிபாரிசுக்கடிதம் கொடுத்தவர் ரொம்பச் சொன்னார். ஏதோ போய்ப் பார்க்கிறேன்! வேலை கிடைச்சா லாபம், இல்லைன்னு நஷ்டமில்லை! அவர் பங்களா எங்கேயிருக்கு சொல்லுங்க, 111, கருடன் கோயில் தெரு, ஆழ்வார்ப்பேட்டை!

ஒரு : நேராப் போய், வலதுகைப்புறம் திரும்பி இரண்டாவது சந்தில்போய் இடதுபுறம் திரும்பி, நான்காவது வீட்டுக்கு வலது பக்கமாகப் போனால், இரண்டு வெள்ளைக் கட்டிடமும், மத்தியில் ஒரு சிகப்புக் கட்டிடமும் இருக்கும். அதுதான் நீ சொல்கிற கஜேந்திரவிலாஸ்!

(போகிறார்.)

முத்து : (தானாகச் சொல்லிக்கொள்ளுகிறான்) வலதுகைப்புறம் போய். இரண்டாவது சந்தில் திரும்பி, பின்...பின் எப்படிப் போகணும். (திரும்பிப் பார்க்கிறான். வழி சொன்னவர் போய்விட்டார்). ரொம்ப சுலபமாக வலது, இடது, வலது என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். ஒன்றுமே புரியவில்லை.

(எதிரில் ஆடம்பரமாக உடையணிந்தவர் வருகிறார்.)

முத்து : சார்!

ஆட : என்னது?

முத்து : 'கஜேந்திரவிலாஸ்' 111, கருடன் கோயில்தெரு எந்தப்பக்கம் போகணும்?

ஆட : என்ன வேணும்?

முத்து : அந்த இடத்தில் இருக்கிற அனுமந்தராயரைப் பார்க்கணும். அவர்தான், சார், லட்சுமி நாராயணு பாங்க் செக்ரடரி! ரொம்பக் கஞ்சன், கல்நெஞ்சன், ஊர்த்தலையில் மிளகா அறைச்சி மாடிவீடு கட்டினவனாம்! கிம்பளம் வாங்கிறதில் எமகாதகப் பேர்வழியாம்! அவர் வீடு எங்கிருக்கிறது?

ஆட : வீட்டு விலாசம் எதற்கு? கொள்ளையடிக்கப்போகிறாயா?

முத்து : என்னங்க அப்படிச் சொல்லிவிட்டீங்க, என்னைப்போல நல்லவன் கிடையாது என்று காண்டக்ட் சர்டிபிகேட், ரெகமண்டேஷன் லெட்டர் ஏராளமா வைத்திருக்கிறேன்! வேலையில்லாததால் இப்படியெல்லாம், கஞ்சன், கல்நெஞ்சன், ஊர்த்தலையில் மிளகா அறைக்கிறவர்கள், கிம்பளம் வாங்குகிற எமகாதகப்பேர்வழிகள் இவர்கள் வீட்டுக்கெல்லாம் அலையவேண்டியிருக்கிறது!

ஆட : அப்படியெல்லாம் அலையவேண்டாம், நேராகத் திரும்பிப்போ!

முத்து : எங்கே?

ஆட : அந்த அனுமந்தராயர் நான்தான்!

முத்து : நீங்களா? தெரியாம சொல்லிவிட்டேன்! உங்களைப்போல தர்மிஷ்டர், தயாளகுணமுள்ளவர், உபகாரி, நேர்மையானவர் கிடையாதுன்னு 'எனக்கு லெட்டர் கொடுத்தவங்க சொன்னாங்க!

ஆட : சாயந்திரமா பங்களாவுக்கு வா!

முத்து : வேலை கொடுப்பீங்களா?

ஆட : என்னிடத்தில் இரண்டு குதிரை சவுக்கு இருக்கு, அதுக்கு முதலில் வேலை கொடுக்கணும்! (போய்விடுகிறார்)

முத்து : வேலை வாங்கப் போற இடத்தில் உதை கிடைக்கும்போலிருக்கிறது! வயி

றைக் காப்பாற்றப்போய், முதுகுத்தோல் உரிந்துவிடப்போகிறது!

(நன்ருக உடையணிந்த மாணிக்கம் வருகிருன்.)

முத்து : மாணிக்கம்! மாணிக்கம்!

மாணி : யாரது?

முத்து : நான்தான் முத்து, உன்னேடு பள்ளிக்கூடத்தில் படித்தவன்!

மாணி : எவ்வளவோபேர் என்னேடு படித்தவர்கள்!

முத்து : நல்லா ஞாகப்படுத்திப் பார்! பள்ளிக்கூடத்தில் பத்தாவதுவரை நீயும் நானும் ஒன்ருகப் படிக்கவில்லையா? பாவம்! பத்தாவதில் நீ தேறவில்லை, நான் தேறிவிட்டேன்! இப்பொழுது நீ என்ன செய்கிருய்?

மாணி : மெயின் அன் கோவில் இருக்கிறேன்!

முத்து : உங்கக் கம்பெனியில் பத்தாவது பெயிலானுக்கூட வேலை தருகிருர்களா? மாணிக்கம்! நான் பத்தாவது பாஸ் செய்திருக்கிறேன், ஒரு வேலை வாங்கித் தருகிருயா?

மாணி : வேலை காலியே யில்லையே!

முத்து : உனக்கு அங்கு என்ன வேலை!

மாணி : அந்தக் கம்பெனிக்குச் சொந்தக்காரனே நான்தான்!

முத்து : அப்படியா? பத்தாவது பெயிலாகி...

மாணி : ஆமாம்! பத்தாவது பாஸ் செய்திருந்தால், உன்னைப்போல் சர்டிபிகேட்டைத் தூக்கிக்கொண்டு வேலைக்கு அலைந்துகொண்டிருப்பேன்! பெயிலானவுடன், கடலைப் புண்ணுக்கு வியாபாரத்தை ஆரம்பித்து, இப்போ பெரிய கம்பெனியாக ஆக்கிவிட்டேன்!

முத்து : உன்னைப் பார்க்கணும்! நீ இப்போ எங்கே போகிருய்?

மாணி : ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுக்கு! கடலைப் புண்ணுக்கு மூன்று தம்பிடி விழுந்துட்டுது, சரக்கு வாங்கினல், ஒரு முப்பதினுயிரம் ரூபாய் லாபம் வரும்!

முத்து : எப்படி எப்படி! மூன்று தம்பிடி விலை குறைந்தால் உனக்கு எப்படி முப்பதினுயிரம் ரூபாய் கிடைக்கும்?

மாணி : நின்று சொல்ல எனக்கு நேரமில்லை! பத்தாவது படிச்சு என்ன பிரயோஜனம்! என்ன தெரியுது!

முத்து : இதோ சர்டிபிகேட் வைத்திருக்கிறேனே!

மாணி : சர்டிபிகேட்டைக் காட்டி என்ன பலன்? பத்தாவதுவரை பள்ளிக்கூடத்தில் நீ செலவழித்த பணத்தை, ஒரு கடலைப் புண்ணுக்கிலோ, காட்டன் மார்க்கட்டிலோ போட்டிருந்தால் பத்துமடங்கு லாபம் வந்திருக்கும்.

(போகிருன்.)

முத்து : (தனியாக) பத்தாவது படித்து என்ன பிரயோஜனம்! என்ன தெரியுது! பத்தாவது வரை செலவழித்த பணத்தை வைத்திருந்தால், அதைப்போல பத்து மடங்கு சம்பாதித்திருக்கலாம்.

(கையிலிருக்கும் சர்டிபிகேட்டை மடித்து, ஒரு முடிவுக்கு வந்தவன்போல, கையில் தட்டிக்கொண்டு போகிருன்.)

காட்சி 3

(பள்ளிக்கூடத்தில் தலைமை ஆசிரியர் அறை. சுவற்றில் பூகோளப்படம், ஒரு பூமி (Globe), புத்தகங்கள் முதலியன இருக்கின்றன. தலைமை ஆசிரியர் தாமோதரம் காலைத் தூக்கிமேஜைமேல் போட்டு, விசிறியால் விசிறிக்கொண்டிருக்கிருர். பள்ளிக்கூட பியூன் உள் நுழைகிருன்.)

பியூன் : உங்களைப் பார்க்கவேண்டுமென்று வெளியில் ஒருவர் காத்துக்கொண்டிருக்கிருர்.

ஹெட் : பரிட்சை சமயம் நெருங்குதல்ல, மோசமான பையனுக்கு மார்க் போடச் சொல்றதுக்கு இப்பொழுதே படையெடுப்பு எடுத்து யாராவது பையனின் அப்பா வந்திருப்பார்.

பியூன் : அவரைப் பார்த்தா பையனுடைய அப்பாவாகத் தெரியவில்லைங்க!

ஹெட் : பின் பள்ளிக்கூடப் பையன் யாராவது வந்திருக்கானே!

பியூன் : அவரைப் பார்த்தா, பையனுகவும் தெரியவில்லை!

(தொடரும்)



(20)

சிவபெருமான் கைவிட்டதும், காகத்தினுருவிலிருந்த சயந்தனுக்கு வேறு எங்குபோய் அடைக்கலம் புகுவது என்று புரியவில்லை. பிரமனும், சிவனும் பார்த்து, இராமர் விட்ட புல்லை எதிர்த்து நிற்கமுடியாது என்று சொல்லிவிட்டால், வேறு யார்தான் முன்வருவார்கள், அந்தப் புல்லிடமிருந்து சயந்தனைக் காப்பாற்ற? சயந்தன் பரதவித்தான், அங்குமிங்கும் பறந்தான், மறைந்தான். ஆனல் புல்லோ விடாமல் துரத்திக்கொண்டு வந்தது.

காக்கை உருவத்தில் சயந்தன் படும் அவதியைத் தேவர்கள் அந்தரத்தில் நின்று பார்த்துக்கொண்டிருக்கிருர்கள். இராமன் விட்ட புல்லின் வலிமை அவர்களுக்குத் தெரியும். அதை எதிர்த்து, இந்திராதி தேவர்கள் நின்ருலும் தடுக்கமுடியாது என்பதும் தெரியும். அதனல், சயந்தனைத் தேவர்கள் அழைத்து, " இந்திரன் மைந்தனே! இராமபிரான் திருவடிகளைத் தவிர உனக்கு வேறு தஞ்சம் கிடையாது. அவரிடம் போய்ச் சரணடைக! அந்தோ !" என்று கூறினர்கள்.

சயந்தன் பறந்துவந்து, சித்திரகூடத்தை அடைந்து, இராமபிரான் முன் வீழ்ந்து " ஐய! நின் சரணம் சரணம்!" என்று அடைக்கலம் கேட்டான். (பக்கத்தில் சீதாபிராட்டியார் புண்ணுன மார்புக்கு ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்) சயந்தன் முதலில் பெரிய குற்றத்தைச் செய்தாலும், பின் அபயம் என்று வந்து விழுந்ததால், பெருங்கருணையுடைய வள்ளல் கோதண்டராமன், திருவுள்ளம் வைத்து, தான் விட்ட அம்பைப்பார்த்து, " ஏ, அம்பே! இக்கொடியவனது கண்களில் ஒன்றை மட்டும் கவர்ந்துகொண்டுபோ!" என்று ஆணையிட்டார். புல்லாகிய அம்பும், காக்கையின் ஒரு கண்ணை வாங்கிப்போயது.

சயந்தன் காக்கையாக இருந்து, பிராட்டியாரை அபசாரப்படுத்தி, ஒரு கண்ணையிழந்ததால், அதிலிருந்து உலகிலுள்ள காக்கைகளெல்லாம் ஒரு கருவிழியை மட்டும் வைத்துப் பார்ப்பதுபோல் பார்க்கின்றனவாம்!

சயந்தன் காக்கையுருவமாகி சீதாபிராட்டியாரைத் தீண்டியது, இராமாயணம் சூளாமணிப்படலத்தில் இருப்பதுடன், வைணவப் பிரபந்தங்களிலும் குறிப்பிடத்தகுந்த கதையாகக் கூறப்படுகிறது. பெரியாழ்வார்ப் பாசுரமொன்றில் இந்தச் சம்பவம் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது.

" சித்திரகூடத் திருப்பச் சிறுகாக்கை முலைதீண்ட
அத்திரமே கொண்டெறிய வனைத்துலகுந் திரிந்தோடி
வித்தகனே இராமாவோ நின்னபய மென்றழைப்ப
அத்திரமே யதன்கண்ணை அறுத்தது மோரடையாளம்."

" சிறுகாக்கை முலைதீண்டிய " சம்பவத்தைச் சீதாபிராட்டியார் மிகவும் ரசித்து அனு

மகிழ்ச்சிகரமான அறிவிப்பு

1-5-55 ஆம் நாளிலிருந்து " மன்றம் " தனது நான்காவது ஆண்டினைப் பூரிப்போடும் பெருமையோடும் துவக்குகிறது. 1-5-55 ஆம் நாள் முதல் 'மன்றம்' 36 பக்கங்களோடு (நான்கு பக்கம் மிகுவாக) வெளிவரும் என்பதை மகிழ்ச்சியோடு அறிவிக்கிறோம்.

ஆசிரியர்,
" மன்றம் "

மானிடம் சொல்லுகிறார். "இந்தச் சம்பவத்தை நீ இராமபிரானிடம் சொல்லும் பொழுது, நான் சொன்னபடியே இனிய சொற்களால் சொல்வாயாக!" என்று சீதை கூறுகிருள். காகம் முலைதீண்டியதைக் கூறும் பொழுது, அது இனிமையானதென்பது எவ்வாறோ தெரியவில்லை! "இனிய சொற்களால் சொல்வாய்!" என்று உரை நடையில் நாம் மேலே போட்டுவிட்டோமே தவிர, கம்பர் மிகுந்த ரசனையுடன், காவியச்சுவை கடுகளவும் குறையாத விதத்தில் சொல்லுகிறார்,

"பாகு தங்கிய வென்றியி னின்சொல் பணிப்பாய்" (சூளாமணிப்படலம் 82-ம் பாடல் 4-வது அடி.) அதாவது "கருப்பஞ்சாற்றின் சுவைபொருந்திய இனிமையான சொற்களால், சொல்வாயாக!"

காகம் மார்பைத் தீண்டியது, அதைக் கணவன் விரட்டினுன்! இந்தச் சம்பவத்தில் என்ன இன்பம் பயப்பதற்கிருந்தது, கருப்பஞ்சாற்றைச்சுவைப்பதைப்போல, சுவைத்துச் சொல்வதற்கு?

சீதையைக் கண்டுபிடிக்க அனுமான் கிளம்பியபொழுது இராமன் சீதையின் அங்க அடையாளங்களை உள்ளங்காலிலிருந்து, உச்சிவரை மிக விளக்கமாகக் கூறினர், ஒரு கணவன் தன் மனைவியைப்பற்றி மாற்றானிடம் சொல்லக்கூடாதவைகளை யெல்லாம்! அதே போல், சீதை அடையாளமாக சயந்தன் காக்கையுருவில் தன்னை அண்டிய கதையைச் சொன்னுள் போலும்! கணவன் மனைவியர் மத்தியில் கிடைத்த தூதன்மூலம் அனுப்பும் செய்திகள்—ஒருவருக்கொருவர் நினைவுகூறும் அடையாளங்கள்!

சயந்தன் காக்கை உருவத்துடன் வந்த சம்பவத்தைச் சீதை அடையாளமாகச் சொல்வதற்குக் காரணம், "அது வேறெவருக்கும் தெரியாது! இராமன் சீதை இருவருக்கும் மட்டும்தான் தெரியும்! தம்பி லட்சுமணனுக்குக் கூடத் தெரியாது! ஆக இந்தச் சம்பவத்தைச் சொன்னுல், அநுமான் சீதையைக் கண்டுதான் வந்தான் என்று இராமன் நிச்சயித்துக் கொள்வான்! அதனுல்தான் சீதை அந்தச் சிரிய சம்பவத்தை அடையாளமாகச் சொன்னுள்!" என்று இராமாயணப் பிரியர்கள் சொல்வார்கள். இராமாயண உரை யெழுதுபவர்களும் இந்தக் காரணத்தை வலியுறுத்துவார்கள். சீதை இராமன் இருவருக்கும் மட்டும்தான் தெரியும் என்பதை நிலைநாட்டவந்த ஒரு உரைகாரர் மிக்க உற்சாகத்துடன் பாடலில் காணப்படாததைக்கூட சேர்த்து எழுதிவிட்டார், "காகாசுர வரலாறு மிக்க ஏகாந்தத்தில், இருவருமான சேர்த்தியில் நடந்ததால், இலக்குமணனுக்கும் தெரியாததாயிற்று" இந்தக் காரணத்தைக் காட்டவந்த உரைகாரர் நிலைமையை இன்னும் மோசமாக்குகிருர்: காட்டில் சீதையும் இராமனும் "மிக்க ஏகாந்தத்தில் **சேர்த்தியிலே** இருந்தார்கள்" சேர்த்தியில் இருந்தார்கள் என்ருல்,இருவரும் புணர்ச்சியின்பத்தில் இருந்தார்கள் என்றுதான் பொருள்படும்! சக்ரவர்த்தித் திருமகனும் இராமபிரானும் லோகமாதாவாம் சீதாபிராட்டியும் சித்திரகூடத்தருகில், பகல்நேரத்தில் இருந்த கோலம் அது! அப்பொழுது மத்தியில் காகம் வந்து சீதையின் மார்பைக் கொத்தியது! இலக்குமணனுக்குத் தெரியாது என்பதற்குக் காரணந்தேடப் போய் இராமாயண உரையாசிரியர் நிலைமையை ஆபாசமாக்குகிருர்.

இன்னொன்றும் பாருங்கள்! காகம் உருவெடுத்த சயந்தன் காகாசுரன் என்று குறிப்பிடப் படுகிறுன். சயந்தன் தேவன், தேவர்களுக்கெல்லாம் இளவரசன். அவன் காகமாக வந்து காமச்சேட்டை விளைத்தபொழுது, காகாசுரன் என்று அசுரப்பட்டத்துடன் கூறப்பட்டுவிடுகிருன்!

சயந்தன் செய்த கேட்டை, சீதை இராமன் இருவருக்கும் மட்டும்தான் தெரியும் என்று சொல்வது பொருந்தாத காரணமென்பதை கம்ப இராமாயணப் பாடல்களைக் கவனிக்கும் பொழுதே தெரியும். இராமன்விட்ட புல்லம்புக்கு ஆற்ருமல், சயந்தன் ஓடியபொழுது, பிரமாவிடம் போயிருக்கிறுன், சிவபிரானிடம் போயிருக்கிருன், அவர்கள் கைவிட எட்டுத் திசையும் சென்ருனும் எல்லோரும் மறுத்துவிட்டார்களாம். இதைக் கம்பர் சூளாமணிப் படலம் 78-ம் பாட்டில் கூறுகிருர். **"மங்கை பங்கனே(டு) எண்டிசையுஞ்செல் மற்றோர், தங்க டங்க ளிடங்கண் மறுத்தமை தைப்பாய்"** அதாவது "மங்கை பாங்கனுகிய சிவபிரானிடத்தும் மற்றும் எட்டு திக்குகளிலும் செல்ல, அங்குள்ளவர்களெல்லாம் தங்கள் தங்கள் இடங்களுக்கு வராதே யென்று மறுத்ததைச் சொல்வாயாக" என்று சீதை சொல்லுகிருள். பிரமனும் சிவனும், எட்டுத் திக்குகளில் உள்ளவர்களுக்கும் சயந்தன் செய்தது தெரிந்துவிட்டது, என ஒதுங்கிவிட்டார்கள்.

சூளாமணிப்படலம் 79-ம் பாடலில், மீண்டும் கம்பர் **"அந்த ரத்தினி னின்றவர் கண்டினி யந்தோ"**

என்று சொல்லுகிருர். லோகமாதாவைத் துன்புறுத்திவிட்டு, இராமன்விட்ட அம்புக்கு ஆற்றுமல் சயந்தன் திண்டாடுவதை அந்தரத்தில் நின்றுகொண்டு தேவர்களெல்லாம் பார்த்து "அந்தோ!" என்று கலங்குகின்ருர் களாம்.

இராமனுல் மன்னிக்கப்பட்டு ஒற்றைக் கண்ணுடன் சயந்தன் ஆபத்து நீங்கித்தப்பி மீண்டதும், "வண்டர்கள் கண்டலர்கொண்டு பொழிந்தார்" என்று தேவர்களெல்லாம் பூமாரிப்பெய்ததைச் சொல்லுகிருர், சூளாமணிப் படலம் 82-ம் பாடலில்.

பிரம்மலோகத்திலிருப்பவர்கள், கைலாசத்திலிருப்பவர்கள், முப்பத்து முக்கோடி தேவர்கள், மற்றும் எட்டுத் திக்குகளிலும் இருப்பவர்கள் இவர்களெல்லாம் சயந்தன் செய்த அடாத செய்கையைக்கண்டு, ஆதரவு தரமுடியாது மறுத்தார்கள் என்று சொல்லப்படுகிறது. அவ்வாறு எங்கும் பரவிவிட்ட செய்தி இராமர் சீதை இருவருக்கும் மட்டும்தான் தெரிந்தது என்று சொல்வது பொருந்தாததாகும்.

அது நிற்க, சயந்தன் காகமாக மாறிக் காமச்சேட்டை செய்ய முயன்ற கதை கம்ப இராமாயணத்தில் 6 பாடல்களில் கூறப்படுகிறது.

காட்டில் இருக்கும் கன்னியரிடம் காமச் சேட்டையாட, தேவர் தலைவன் இந்திரன் மாற்றுருவில் சென்றுன். ஆயிரங்கண்களுடன் வெளிவந்தான். அவன் பிள்ளை சயந்தனும் மாற்றுருவில் சென்றுன்; கண்கள் அதிகமாகவில்லை. ஒரு கண் குறைந்து வந்தான் அவ்வளவுதான்!

சயந்தனுடைய தங்கை சயந்தி என்பவள். தேவர்களுக்கு எதிர்ராக அசுர குரு சுக்கிரன் தவம்செய்தபொழுது, அவன் தவத்தைக் கலைக்க, இந்திரனுல் சயந்தி அனுப்பப்பட்ட கதை முன்பு கூறப்பட்டுள்ளது.

தேவலோகத்தில் முப்பத்து முக்கோடி தேவர்கள் இருப்பதாகப் புராண 'சென்சஸ்' கூறுகிறது. அவர்களில் ஒவ்வொரு கோடிக்கும் தலைவராக ஒருவர் இருப்பார். அவர்களைப் பெரும்பகுதியாகப் பிரித்தால்; 12 ஆதித்யர்கள், 11 உருத்திரதேவர்கள், 8 வசுக்கள், 2 அசிவனிதேவர்கள என்பவர்களாவர்.

தேவலோகத்தில் ஒரு பகுதியாக அரம்பையர் உலகம் இருக்கிறது. அங்கு திலோத்தமை, ஊர்வசி, மோகினி, மேனகை, ரம்பை போன்ற தேவமாதர்கள் இருக்கிருர்கள். அவர்களின் எண்ணிக்கை 60 கோடி. தேவலோகமல்லவா, 33 கோடி தேவர்களுக்கு 60 கோடி தேவமாதர்கள்! அதாவது 11 தேவர்களுக்கு, 20 தேவமாதர்கள் காத்திருப்பார்கள், அதிலும் கணவன்—மனைவி என்ற கட்டுப்பாடு எதுவும் இல்லாமல்! புராணங்கள் எழுதியவர், தேவலோகத்தில் சகல இன்பங்களும் தங்கு தடையின்றிக் கிடைக்கும் என்பதற்காக, ஆண்களைவிட இரண்டுமடங்கு பெண்களை—அரம்பையர்களை சிருட்டித்து வைத்துள்ளார்கள். அத்துடன், தேவமாதர் என்பதற்கே ஒழுக்கங்கெட்டவர்கள் என்ற பொருளில் புராணக்கதை எழுதிவிட்டார்கள்.

யாகஞ் செய்தவர்கள், மகாவீரர்கள் ஆகியவர்களே தேவருலகை அடையமுடியும். ஆனுல் தேவலோகத்தைச் சேர்ந்த அரம்பையர் உலகை அடையும் பெண்களுக்குரிய கட்டணம் மிகச் சுலபமானது—கீழ்த்தரமானது. "விரதந்தவறிய பெண்கள், கணவருடன் இருமனப்பட்டு புணர்ந்தவர்கள், அரம்பையர் உலகை அடைவார்கள்" என்று புராணம் கூறுகிறது!

தேவருலகம் போக, ஆண்கள் யாகவிரதங்கள் செய்யவேண்டும். ஆனுல் பெண்கள் விரதங்களைத் தவறவிட்டால் போதும்! தேவருலகம்போக, ஆண்கள் மாவீரனுக இருக்கவேண்டும். பெண்கள் மாற்றுனை மனதில் வைத்துக்கொண்டு மணுளனை அணைப்பவளாக இருந்தால் போதும்! ஏன் இந்த வேறுபாடு? புராணகாரர் காரணமில்லாமல் அப்படி எழுதி வைக்கவில்லை. பூலோகத்தில் வேண்டப்படுவதைப்போல, தேவலோகத்திலும் பெண்கள் கற்புக்கரசிகளாக இருந்துவிட்டால், இங்கு புரோகிதர் கூறும் வர்ணனைகளைக் கேட்டு யாகங்களைச் செய்துவிட்டுத், தேவலோகத்தில் அடியெடுத்துவைக்கிறவனுக்கு என்ன உபசாரம் கிடைக்கும்? பிரகஸ்பதி "வா!" என்று அழைப்பார், உரோகரிஷி வரவேற்பார், மிருகண்டு கைகுலுக்குவார், சடாமுடிதாரிகள் உபசரிப்பார்கள்! இவ்வாறு காட்டுமிராண்டிக் கோலத்தில், தாடியும் மீசையும், எலும்பும் தோலும் உடைய முனிவர்களும், தேவர்களும் இருப்பது தேவலோகம் என்ருல் யாகஞ்செய்பவர்கள் வெகுசிலர்தான் முன்வருவார்கள்! ஆனுல் புராணக்காரர் அப்படிப்பட்ட தேவலோகத்தைச் சிருஷ்டிக்கவிரும்பவில்லை.

(தொடரும்)

அட்டைப்படம்

கோயிலைக் கள்ளர் குகை ஆக்காதீர்!

மனித சமுதாயத்தைச் சீர்திருத்தி, நல்வழிப்படுத்தி, அதற்கு நன்மையையும் மகிழ்ச்சியையும் பயந்து, அதன் இனிய இன்பவாழ்வைப் பெருக்கவேண்டி அரும்பாடுபட்டு, அந்த முயற்சியிலே தங்களைத் தாங்களே காவு கொடுத்துக்கொண்டு, உலகுக்குச் சிறியதோர் எடுத்துக்காட்டாக விளங்கியவர்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரேயாவார்கள். அவர்களில் ஒருவர்தான் ஏசுகிருத்து.

ஏசுகிருத்து, அவர் காலத்திலே வாழ்ந்த சீர்திருத்த வாதிகளிலே மிகச்சிறந்து விளங்கிய சீரியவராவார் என்ற முறையில்தான் அவரைப் பகுத்தறிவுவாதிகளாகிய நாம் போற்றிப் புகழுகிறோம். அவரோடு தொடர்பு படுத்திச் சொல்லப்படும் நிகழ்ச்சிகளையும் கருத்துக்களையும் முன் வைத்துக்கொண்டு தான் அவரை நோக்குகிறோம். பகுத்தறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருந்திவராத அவரது சில 'நம்பிக்கைகளை'யும், மனித ஆற்றலுக்கு மீறிய அவரது 'அற்புதச் செயல்களை'யும் கழித்துவிட்டு, அறிவிக்கும் ஆராய்ச்சிக்கும் பொருந்திவரக்கூடிய அவரது கருத்துக்களையும், நிகழ்ச்சிகளையும், சீர்திருத்தங்களையும் நாம் போற்றத் தவறுவதில்லை. அந்த முறையில் காணும்போதுதான் அவரை அந்த அளவுக்குப் போற்றுகிறோம். அந்த அளவுக்கு எடுத்துக்காட்டாக முன்வைக்கிறோம். இதே அடிப்படையில்தான் நபிகள் நாயகத்தையும், புத்தரையும், மகாவீரரையும், இராமானுசரையும், இராமலிங்கரையும், சித்தர்களையும், சாக்ரடீசையும் எடுத்துக்காட்டுகளாகக் காட்ட நாம் சிற்சிலபொழுது முற்படுகிறோம்.

கோயில் அறிவின் நிலைக்களனாய், அன்பின் இருப்பிடமாய், ஒழுக்கத்தின் கூடமாய், உண்மையின் சேர்க்கையாய் இருக்கவேண்டும் என்று சொல்லப்படுகிற கருத்துக்கள் பகுத்தறிவுவாதிகளுக்கு முரண்பட்டவையல்ல. அங்கு குருட்டு நம்பிக்கைகளாகவும், மூடப் பழக்கங்களாகவும் தோன்றுகிற கருத்துக்களைத்தான் பகுத்தறிவுவாதிகள் வெறுக்கிறார்கள். ஏசுவின் போற்றுதற்குரிய செயல்களிலே ஒன்று, "கோயிலைக் கள்ளர்குகை ஆக்காதீர்!" என்று கூறிக், கோயிலிலே கூடாரம் அடித்துக் கொடுமை புரிந்துகொண்டிருந்த கொடியவர்களை விரட்டியடித்ததாகும். எப்பொழுதும் இளகிய மனதுடையவராகவே காட்சியளித்துவந்த ஏசு, தம் கையிலே சாட்டையை ஏந்திக் கோயிலிலே குடியேறியிருந்த கொடியவர்களையெல்லாம் விரட்டிவிரட்டி அடித்தாராம். அவர் தமது வலுவாதிக்கத்தை நிலைநாட்டிய வாய்ப்பு இது ஒன்றுதான் என்றுகூடக் கூறுவர். வட்டிக்குப் பணம் கடன் கொடுத்துக், கொள்ளைவட்டி வாங்கி, ஏழைகளைக் கொடுமைப்படுத்தி, அவர்களைக் கண்ணீர்விடச்செய்து கோயிலைக் கள்ளர் குகையாக்கிக்கொண்டிருந்தனர், பல பணப் பேராசைபிடித்தவர்கள். அவர்களையெல்லாம் விரட்டியடித்துக் கோயிலை ஒழுக்கத்தின் கூடமாக ஆக்க முயன்றார் ஏசு. அந்த அளவில் அது போற்றுதற்குரிய செயலேயாகும்.

ஏசு கோயிலிலே கும்மாளம் அடித்துக் கொண்டிருந்த கொடியவர்களை விரட்டியடிக்கும் காட்சிதான் இவ்விதழ் அட்டைப்படமாக விளங்குவதாகும்.

'மன்றம்' வளர்ச்சிக்கு நன்கொடை

	ரூ.	அ.
இரா. இலக்குவன், திருவைகுண்டம்	5	0
மணமக்கள் தியாகராசன்-சரோசா தர்மபுரி	10	0
குழந்தை பூங்கொடி, இருகூர்	1	0
சி. பி. கணபதி, சித்தூர்	5	0
மணமக்கள் கதிரேசன்-பாஞ்சாலி, தஞ்சை	5	0
தி. மு. கழகம், புதுக்குடி (தஞ்சை)	1	0
குழந்தை பூங்கொடி, எண்கண் (தஞ்சை)	1	0

நன்கொடை அளித்தோர் அனைவர்க்கும் எம் மனமார்ந்த நன்றி உரித்தாகுக!

ஆசிரியர்.

பிணியும் பணியும்

[செல்வன்]

[இச்சிறுகதை, சென்ற நூற்றாண்டில் ரஷ்யாவில் வாழ்ந்த இலக்கிய மேதை இவான் தூர்கனிவ் என்பவர் எழுதிய **மாவட்ட மருத்துவர்** (The District Doctor) என்னும் கதையின் மொழிபெயர்ப்பாகும். கதையின் பெயர்கள் மட்டும் தழுவப்பட்டுள்ளன.]

இளவேனிற் காலத்தில் ஒரு நாள். என் பிரயாணத்தினின்றும் வீடு திரும்புகையில் காய்ச்சல் வந்து விட்டது. நல்ல வேளையாக நான் இருந்த ஊர் ஒரு நகரம். டாக்டரை அழைத்துவர ஆள் அனுப்பினேன். அரை மணி நேரத்தில் டாக்டரும் வந்து விட்டார். நடுத்தர உயரம், ஒல்லியான தேகம், கருத்து அடர்ந்த தலைமயிர் இவற்றுடன் காணப்பட்டார். காய்ச்சலுக்கு வழக்கமாகக் கொடுக்கும் மருந்தைக் கொடுத்துவிட்டு, சிறிது ஒத்தடமும் கொடுக்கச் சொல்லிவிட்டு, 'டாக்டர்பீசை' எடுத்துக்கொண்டு வெளிக்கிளம்பும் வேளையில் எதிர்பாராதவிதமாகப் பேச்சு ஆரம்பிக்கவே என்னுடனேயே தங்கிவிட்டார். காய்ச்சல் மிகுதியினால் எனக்குக் களைப்பாயிருந்தது. இரவு நன்றாகத் தூங்க முடியாது என்றும் தெரிந்ததால் சிறிது நேரம் உரையாடிக்கொண்டிருப்பதை பெரிதும் விரும்பினேன், காபி சாப்பிட்ட பிறகு டாக்டர் உற்சாகமாக உரையாடலைத் துவக்கினார், அவரது பேச்சில் கருத்து ஆழமும், நகைச்சுவையும் மிளிர்ந்தன. உலகில் எவ்வளவோ விந்தையான நிகழ்ச்சிகள் நடக்கின்றன. சிலருடன் நீண்டநாட்கள் பழகி, நட்புடனிருந்தாலும் உள்ளத்தைத் திறந்து உரையாடுவது குறைவுதான். மற்றும் சிலருடன் சிறிது நேரமே பழகுவதற்கு வாய்ப்பிருந்தபோதிலும் ஒருவருக்கொருவர் உள்ளத்தைத் திறந்து உரையாடுகிறோம். டாக்டரின் உள்ளத்தை எப்படிக் கவர்ந்தேன் என்று எனக்கே தெரியாது. என்னிடம் வேடிக்கையான சம்பவம் ஒன்றைச் சொன்னார். டாக்டர் சொன்ன நிகழ்ச்சியை அப்படியே சொல்கிறேன்.

"உங்களுக்குத் தெரியாது இதைப்பற்றி..." என்று நடுங்கும் மெல்லிய குரலுடன் டாக்டர் ஆரம்பித்தார். "அனவரதம் என்ற நீதிபதியைப்பற்றி உங்களுக்குத் தெரியாதல்லவா... பரவாயில்லை" என்று தொண்டையைக் கனைத்துக்கொண்டும், கண்ணைக் கசக்கிக் கொண்டும், ஆரம்பித்தார். ஒரு நாள் நான் அந்த நீதிபதியுடன் சீட்டாடிக் கொண்டிருக்கும்பொழுது "உங்களைத் தேடி ஒரு வேலைக்காரன் வந்திருக்கிறான்" என்றான் பணியாள்.

அவனுக்கு என்ன வேண்டும்" என்று நான் கேட்டேன்.

ஒரு கடிதம் கொண்டு வந்திருக்கிறான் என்றான்.

கடிதத்தை வாங்கிப் பார்த்தேன். அது அது ஒரு நோயாளியின் கடிதம். அவர்கள் தானே எங்களுக்கு வாழ்வளிப்பவர்கள். அந்தக் கடிதம் ஒரு விதவையினால் எழுதப்பட்டிருந்தது. "என் மகள் இறக்கும் தருவாயில் இருக்கிறாள். கடவுள் மேல் ஆணையாகக் கட்டாயம் வாருங்கள் வண்டி அனுப்பியிருக்கிறேன்" என்றிருந்தது. அந்தக் கிராமம் நகரத்திலிருந்து 20 மைல் தொலைவில் இருந்தது நடு இரவு. பாதையில் வருவோர் போவோர் தெரியாத அளவுக்கு நல்ல மையிருட்டு. கடிதம் அனுப்பியவளோ பரம ஏழை. பணமும் அவளிடமிருந்து அதிகம் எதிர்பார்க்க முடியாது. இரண்டு ரூபாய் கிடைத்தால் பெரிது. ஆனால் அதுவே சிரமம்தான். வெறுங்காப்பியோடு கூட நின்று விடலாம். எது எப்படியிருந்தபோதிலும், ஒரு உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும்போது கடமைதான் முக்கியம் என்று கருதிச் சீட்டாட்டத்தை விட்டு வீட்டிற்குச் சென்றேன். அவர்களனுப்பிய வண்டி மிகப் பழமையானதாக இருந்தது. வண்டிக்காரன் மரியாதைக்காகத் தன் குல்லாவை எடுத்துக்கொண்டு கந்தல் துணிகளுடன் காட்சியளித்தது, நோயாளி பணத்தில் புரள்பவர் அல்ல என்பதை எடுத்துக்காட்டிற்று. மிக முக்கியமான மருந்துகளை எடுத்துக் கொண்டு கிளம்பினேன். குண்டும், குழியுமான அந்தப் பாதையில் தட்டுத் தடுமாறிப் போய்ச் சேர்ந்தோம். அது ஒரு சிறிய கூரை வேய்ந்த வீடு. ஜன்னல் வழியாகத் தெரிந்த வெளிச்சம் என்னை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காட்டிற்று.

வயதான ஒரு கிழவி வாசலில் என்னை வரவேற்று "அவளைக் காப்பாற்றுங்கள். அவள் இறந்து கொண்டிருக்கிறாள்" என்று கூறி நோயாளி இருக்கும் சிறு அறைக்கு அழைத்துச் சென்றாள். சுத்தமாக வைக்கப்பட்டிருந்தது அந்த அறை. அதன் ஒரு மூலையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. கட்டிலில் இருபது வயதடைந்த இளம்பெண் ஒருத்தி மயங்கிய நிலையில் கிடந்தாள். காய்ச்சல் மிகுதியால் உடம்பு நன்றாகக் கொதித்துக் கொண்டிருந்தது. பெருமூச்சு வாங்கிக் கொண்டிருந்தாள். அவளருகில் இரண்டு தங்கைகளும் கலவரத்துடன் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தனர்.

"நேற்று நன்றாக இருந்தாள். நன்றாகச் சாப்பிட்டாள். இன்று காலை தலைவலி என்றாள் ஆனால் மாலையிலிருந்து இதைப்போலிருக்கிறது" என்றனர் அந்தப் பெண்கள் "கவலைப்படாதீர்கள்" என்றேன், டாக்டர்களின் கடமை அதுதானே. நோயாளியிடம் சென்று பரிசோதித்து மருந்து கொடுத்தேன். கொஞ்சம் ஒத்தடமும் கொடுக்கச் சொன்னேன். இதற்கிடையில் நான் அவளைப் பார்த்தேன். உண்மையில் அவளைப் போல அழகி வேறு யாரையும் நான் கண்டதில்லை. சுருங்கக்கூறின் அவள் ஓர் அழகுக் களஞ்சியம். அவளுக்காக நான் மிகவும் பரிதாபப்பட்டேன். அவ்வளவு அழகான கண்கள்! உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் மோகன வடிவம்! நல்ல வேளை! அவளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக உணர்வு திரும்பியது. நன்றாக வியர்த்துக் கொட்டியது. சுற்றிப் பார்த்து வரட்டுச் சிரிப்புடன், தன் கைகளால் முகத்தைத் தடவிக் கொண்டாள். அவள் தங்கைகள் குனிந்து 'இப்பொழுது எப்படி இருக்கிறது" என்று கேட்டனர். 'நன்றாக இருக்கிறேன்' என்று கூறிவிட்டு மறுபக்கம் திரும்பிக்கொண்டாள். நான் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தேன், அவள் தூங்கிவிட்டாள். "சரி நோயாளியை தனியே விட்டுவிடுங்கள், நன்றாகத் தூங்கட்டும்" என்று கூறினேன். நாங்கள் எல்லாம் சத்தம் செய்யாமல் அறைக்கு வெளியே வந்துவிட்டோம். வேலைக்காரி மாத்திரம் அந்த அறையினுள் இருந்தாள்.

முற்றத்தில் ஒரு மேஜையின்மேல் சிறிது பலகாரமும் ஒரு குவளை காப்பியும் இருந்தது. எனக்கு உணவளித்து இரவு தங்கச் சொன்னார்கள். அந்த நடு நிசியில் நான் வேறு எங்கும் செல்ல இயலாது. கிழவியோ முணங்கிக் கொண்டிருந்தாள். "ஒன்றும் கவலைப்படாதீர்கள். அவள் நிச்சயமாகப் பிழைத்து எழுவாள். மணி இரண்டாகிறது. நீங்கள் சற்று ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்" என்றேன். "ஏதாவது தேவைப்பட்டால் என்னை எழுப்புங்கள்" என்று கூறிச் சென்றுவிட்டாள், அந்தக்கிழவி. தங்கைகள் இருவரும் அவரவர் அறைக்குச் சென்றுவிட்டனர்.

எனக்கு முற்றத்தில் படுக்கை போடப்பட்டிருந்தது. எனக்கு மிகவும் களைப்பாக இருந்தது. ஆனால் தூக்கம் வரவில்லை. நோயாளியைப்பற்றிய சிந்தனைச் சுழலில் சிக்கிக் கொண்டு தவித்தேன். என்னால் பொறுக்க முடியவில்லை. கடைசியாக எழுந்து நோயாளி எப்படி இருக்கிறான் என்று பார்த்துவரலாம் என்று அவள் அறையை நோக்கிச் சென்றேன்.

முற்றத்திற்கு அடுத்து இருந்தது அவளது அறை. மெதுவாக அரைக் கதவைத் திறந்தேன். அப்பொழுது என் இதயத் துடிப்பை என்னால் நன்றாக உணரமுடிந்தது. அறையினுள் வேலைக்காரி திறந்த வாயுடன், குறட்டை விட்டு நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தாள். ஆனால் அந்த நோயாளியின்முகம் என்னை நோக்கியிருந்தது. அவளது கைகள் விரிந்து பரந்திருந்தன. பாவம்! நான் அவள் அருகில் சென்றேன். கண்களை அகலவிரித்து என்னை உற்றுப்பார்த்து "யாரது? யாரது?" என்றாள். எனக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை.

நடுநிசி, முன்பின் தெரியாத கிராமத்தில் ஒரு நோயாளியின் அறையில் நான் ஒருவாறு என்னைச் சமாளித்துக் கொண்டு 'பயப்படாதே நான்தான் டாக்டர். உடம்பு எப்படி இருக்கிறதென்று பார்த்துப் போக வந்தேன்' என்றேன்.

'நீயா டாக்டர்?'

"ஆம். உன் தாய் நகரத்திலிருந்த எனக்கு ஆள் அனுப்பினாள். சரி, நீ தூங்கு. இன்னும் இரண்டொரு தினங்களில் உடம்பு முற்றும் குணமாய்விடும்" என்றேன்.

"ஆம். ஆம் டாக்டர். என்னை சாகவிடாதீர்கள். தயை செய்யுங்கள்".

"நீ அப்படியெல்லாம் பேசாதே! கடவுள் உன்னைக் காப்பாற்றுவார்" என்றேன்.

மறுபடியும் அவளுக்கு நன்றாகக் காய்ச்சல் அடித்தது. அவள் நாடியைப் பார்த்தேன். என்னையே பார்த்துக்கொண்டிருந்தவள் என் கைகளைப் பிடித்துக்கொண்டாள். "நான் ஏன் சாகவிரும்பவில்லை என்பதை உங்களுக்குச்

சொல்கிறேன்......இப்பொழுது நாம் தனியாகத்தான் இருக்கிறோம். ஆனால் இதை யாருக்கும் சொல்லக்கூடாது. கவனியுங்கள்'' என்றாள்.

நான் சற்று குனிந்தேன். அவளது உதடுகள் என் காதருகில் இருந்தன. அவளது தலைமயிர் என் கன்னத்தில் உராய்ந்தது. என் தலை சுற்றியது. அவள் என்ன சொன்னாள் என்று புரிந்துகொள்ள முடியவில்லை.

அந்தோ! அவளுக்கு ஜன்னி பிறந்துவிட்டது. நினைவிழந்து விட்டாள். ஏதேதோ முணங்கினாள். ஆனால் அவள் உளறல் ஏதோ வேற்றுமொழிபோல் தோன்றியது. கடைசியாக நடுக்கத்துடன் தலையணையில் சாய்ந்தாள். விரலை ஆட்டி என்னைப் பயமுறுத்தும் பாவனையில் 'ஞாபகம் டாக்டர். ஒருவருக்கும் தெரியக்கூடாது' என்றாள். அவளைச் சமாதானப்படுத்தி, படுப்பதற்குச் சிறிது மருந்தும் கொடுத்து, வேலைக்காரியை எழுப்பி விட்டு, நான் வந்துவிட்டேன்.

டாக்டர் இந்த இடத்தில் சிறிது நிறுத்திக் கொண்டு கொஞ்சம் பொடியை எடுத்து உறிஞ்சினார். அதன் காரத்தினால் சில நிமிடம் முகத்தைச் சுளித்துக் கொண்டிருந்தார். பிறகு தொடர்ந்து ஆரம்பித்தார்.

மறுநாள் நான் எதிர்பார்த்ததற்கு மாறாக நோயாளி குணமடையவில்லை. நீண்ட நேரம் யோசித்தேன். என்னைத் தேடிவரும் மற்ற நோயாளிகள் எனக்காக எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள் என்று தெரிந்தும் கிராமத்திலேயே தங்குவது என்று முடிவு கட்டினேன். அம்மாதிரி நடந்துகொள்வதால் வழக்கமாக வரும் நோயாளிகள் வருவது நின்றுவிடும் அதைப்பற்றியும் நான் கவலைப் படவில்லை. நோயாளி மிகவும் அபாயத்திலிருந்தாள். மேலும் என்னை அறியாமல் ஒரு கவர்ச்சி இருந்தது அவளிடம். அந்தக் குடும்பத்தையே நான் பெரிதும் விரும்பினேன், பணம் இல்லாவிடினும் நல்ல பண்பு படைத்தவர்களாக இருந்தனர். அவர்களின் தந்தை கற்றறிந்தவர்; எழுத்தாளர்; வறுமையால் உயிர் இழந்தார். ஆனால் அதற்குமுன் தன் குழந்தைகளுக்குக் கல்வி போதித்து, அத்துடன் ஏராளமான புத்தகங்களையும் விட்டுச் சென்றார். நான் நோயாளியைச் சிரத்தையுடன் பார்த்ததாலோ அல்லது எந்தக் காரணத்தாலோ என்னை அவர்கள் குடும்பத்தில் ஒருவனாக எல்லோரும் நேசித்தனர். இதற்கிடையில் இரவு பெய்த கடும் மழையால் பாதை மிகவும் மோசமாகி போக்குவரத்து துண்டிக்கப்பட்டுவிட்டது. மருந்தும் மிகச் சிரமத்துடன் நகரிலிருந்து வாங்க வேண்டியிருந்தது. நோயாளியும் தேறுவதாகத் தெரியவில்லை. நாட்கள் சென்று கொண்டிருந்தன (இந்த இடத்தில் டாக்டர் சிறிது நிறுத்திப் பிறகு ஆரம்பித்தார்.)

"உங்களிடம் எப்படிச் சொல்வதென்றே புரியவில்லை (டாக்டர் கொஞ்சம் பொடி உறிஞ்சி, ஒரு கோப்பை டீ சாப்பிட்டார்) சுற்றி வளைக்காமல் சொல்கிறேனே........... அந்த நோயாளி...என்னைக் காதலித்தாள்... அவள் காதலிக்கவில்லை.........ஆனால் அதை எப்படிச் சொல்வது (டாக்டர் தலையைக் குனிந்து கொண்டிருந்தார் அவர் முகம் சிவப்பேறியிருந்தது). இல்லை இல்லை காதல்! மனிதர் தன்னையே அதிகமாக மதிப்பிடக் கூடாது. அவள் கல்வியறிவுடையவள். புத்திசாலி. ஆனால் நானோ! நான் படித்தவற்றில் பெரும்பகுதியை மறந்துவிட்டேன். உருவத்திலோ! (டாக்டர் தன்னைத்தானே பார்த்துக் கொண்டு சிரித்தார்) எதைப்பற்றியும் நான் பெருமைப்படுவதற்கில்லை. ஆனால் நான் கருப்பை, வெள்ளை யென்று கருதும் முழு முட்டாள் அல்ல. எனக்கும் ஏதோ கொஞ்சம் தெரியும். உதாரணமாக சூடாமணி—அது தான் அந்த நோயாளியின் பெயர்—என்னைக் காதலிக்கவில்லை. என்னிடம் ஏதோ ஒரு பாசம், ஒரு பற்றுதல். இதையே அவள் வேறுவிதமாக நினைத்துக்கொண்டாள். நீங்களே இதைப்பற்றி ஒரு முடிவுக்கு வரலாம், ஆனால்' என்றார் டாக்டர்.

திக்கித்திணறி முன்பின் தொடர்பின்றி இந்த விஷயத்தைச் சொன்னார். "நான் சுற்றி வளைத்துக்கொண்டிருக்கிறேன். உங்களுக்கு எதுவும் புரியாது. மறுபடியும் கோர்வையாக நடந்தவற்றைச் சொல்லுகிறேன்'' என்று ஆரம்பித்தார் டாக்டர்.

என் நோயாளி மிகவும் மோசமான நிலையை அடைந்து கொண்டிருந்தாள். நீங்கள் ஒரு டாக்டராக இருந்தால், நோயாளியின் நோய் அதிகமாக ஆரம்பித்தால் டாக்டரின் மனதில் ஏற்படும் வேதனை விளைவுகளைப் புரிந்து கொள்ளமுடியும். அவனுக்குத் தன்னைப்பற்றியே பெரிய சந்தேகம் வந்துவிடும். படித்தவை எல்லாம் மறந்துவிட்டது போன்ற உணர்ச்சி தலைதூக்கி நிற்கும். நோயாளிக்கு டாக்டரின்மேல் உள்ள நம்பிக்கை தேய்ந்து மறைந்துவிடும். சுற்றி இருப்பவர்கள் மரண அறிகுறி என்று தங்களுக்குத் தெரிந்ததைச் சொல்லிக்கொண்டே டாக்டரைச் சந்தேகத்

துடன் பார்ப்பார்கள். அப்பப்பா! பயங்கரம்! இந்த நோய்க்கு ஒருமருந்து இல்லையா என்று கண்ட மருந்துகளைக் கொடுத்து அது வேலை செய்வதற்குக்கூட போதிய அவகாசம் கொடுப்பதில்லை. ஒரு மருந்திலிருந்து மற்றொரு மருந்துக்குத் தாவத் தோன்றும். ஒவ்வொரு சமயமும் புத்தகத்தைப் புரட்டி இதுதான் சரியான மருந்து என்று கொடுக்கத் தோன்றும். மறு சமயம் தற்செயலாக ஒரு மருந்தைக் கொடுத்து 'விதிவிட்ட வழி' என்று இருக்கத் தோன்றும்.

ஆனால் எப்படியாவது இந்த டாக்டர் காப்பாற்றிவிடுவார் என்ற குருட்டு நம்பிக்கை வைத்திருந்தனர் சூடாமணியின் குடும்பத்தினர். எனக்கு நம்பிக்கை துளிகூட இல்லை. இருந்தாலும் அவர்களுக்குத் தேறுதல் சொல்லி வந்தேன், மருந்து வாங்கச் சென்ற வேலைக்காரன் பாதை சரியில்லாததால் ஒரு நாள் முழுதும் வரவில்லை. நான் நேயாளியின் அறையை விட்டு வெளியேறவில்லை, எப்பொழுதும் அவளுடன் இருந்து அவளுக்கு வேடிக்கையான கதைகளைச் சொல்லியும், அவளுடன் சீட்டு விளையாடியும் வந்தேன். இரவு நேரத்திலும் அவளுடனிருந்து கவனித்து வந்தேன். அவள் தாய் கண்களில் நீர் ததும்ப எனக்கு வணக்கத்தைத் தெரிவித்தாள். நான் இதற்குத் தகுதியல்ல என்பது எனக்குத் தெரியும்.

உங்களிடம் எதையும் மறைப்பதில் பயனில்லை, என் நோயாளியிடம் காதல் கொண்டேன். அவளும் என்மீது அதிகப்பிரியம் வைத்திருந்தாள். சிற்சில சமயங்களில் அறையில் என்னைத்தவிர வேறு யாரையும் நுழைய விடுவதில்லை. நான் படித்த கல்லூரி, என் உறவினர்கள் என் வாழ்க்கை, என் நண்பர்கள் இவர்களைப்பற்றி பல கேள்விகளை என்னிடம் கேட்பாள். நோயாளி அதிகம் பேசுவதை நான் விரும்பவில்லை. இருந்தும் என்னால் அவளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. சிற்சில சமயங்களில் தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்துவிடுவேன். என் கைகளைப் பிடித்துக்கொண்டு என்னையே உற்றுப் பார்ப்பாள். நீண்டநேரம் பார்ப்பாள். பிறகு ஒரு பெரிய பெருமூச்சுடன் வேறுபக்கம் திரும்பிக்கொண்டே 'நீங்கள் மிகவும் நல்லவர்' என்பாள். அவள் கைகள் சுரவேகத்தில் சூடேறி யிருக்கும். "என் அக்கம் பக்கத்தவரைப் போலன்றி உண்மையாகவே, நீங்கள் மிகவும் நல்லவர்... ஆம்......உண்மையாகவேதான்...... இதுநாள் வரை நான் உங்களைப்பற்றித் தெரிந்து கொள்ளவில்லை!" என்பாள். "அமைதியாக இரு உடம்பு குணமாய்விடும்!" என்றேன்.

சுற்றி வாழ்பவர்களுடன் அவள் குடும்பத்தினர் அவ்வளவாக நெருங்கிப் பழகுவதில்லை. தங்களைவிடக் கீழ்நிலையில் இருப்பவர்களுடனும், அதிகம் பணம் படைத்தவர்களிடமும் நெருங்கிப்பழக முடியாத நடுநிலையிலிருந்தவர்கள் ஆனால் கற்றறிந்தவர்கள். மேம்பட்ட பண்பாடுடையவர்கள்.

நான்தான் அவளுக்கு மருந்து கொடுக்க வேண்டும். என் உதவியினால்தான் படுக்கையைவிட்டு எழுந்திருப்பாள். அந்த நேரங்களில் அவள் என்னையே உற்றுப் பார்க்கும் பொழுது என் இதயம் வெடித்துவிடும்போலிருக்கும்.

நாளுக்குநாள் நோயாளியின் நிலைமை மோசமாகிக்கொண்டிருந்தது. அவள் இறந்துவிடுவாள். ஆம். அவள் இறப்பதைத் தவிர வேறு வழியில்லை. நான் அவளுடன் சமாதிக்குச் செல்வேன். ஆனால் பாவம்! அவள் தாயும், தங்கைகளும் என்னையே பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். என்னிடம் அவர்கள் வைத்திருந்த நம்பிக்கையும் நலிந்து கொண்டே வந்தது.

ஒருநாள் இரவு. நோயாளியுடன் நான் தனியாக இருந்தேன். வேலைக்காரி நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். சூடாமணிக்கு காய்ச்சல் அதிகமாயிருந்தது. மாலை முழுதும் அமைதியின்றித் தவித்தாள். நடு இரவு வரை படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள். கடைசியாக அசைவின்றிப் படுக்கையில் கிடந்தாள். அறையின் மூலையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. தூக்க மிகுதியால் நானும் ஆடி அசைந்து கொண்டிருந்தேன். திடீரென்று யாரோ என்னைத் தொடுவது போன்ற ஒரு உணர்ச்சி, திரும்பிப்பார்த்தேன். சூடாமணி என் தோளைப் பற்றிக்கொண்டிருந்தாள். அவள் உதடுகள் அசைந்தன. காய்ச்சல் மிகுதியால் கன்னம் சூடேறியிருந்தது.

"டாக்டர் நான் சாகத்தான் வேண்டுமா? சொல்லுங்கள் டாக்டர், எதையும் ஒளிக்காமல் உண்மையைச் சொல்லுங்கள் டாக்டர்?' மூச்சு வேகமாக வந்து கொண்டிருந்தது. 'நான இறப்பது உறுதி என்றால் உங்களிடம் விபரமாக எல்லாவற்றையும் சொல்கிறேன், டாக்டர்! நான் இதுவரை தூங்கவில்லை உங்களையே பார்த்துக்கொண்டிருந்தேன். நான் உங்களை நம்புகிறேன். நீங்கள் மிகவும் நல்லவர். டாக்டர் தயவுசெய்து சொல்லுங்கள் நான் பிழைக்கவழியுண்டா?" என்றாள்.

(அடுத்த இதழில் முடிவுறும்)

அலவன் ஓம்பும் வலவன்

[எழினி]

அவளோ பருவ மங்கை. அழகெல்லாம் ஒன்றுதிரண்டு ஓருருவான பெண்ணரசியாக விளங்குகிறாள். அவள் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாகக் காட்சியளிப்பது அவள் வாழ்ந்துவரும் சிற்றூருக்கே தனி அழகைக் கொடுக்கிறது.

அவளது நடமாட்டம் காளைகள் பலரின் கண்ணோட்டத்தைத் தன்பால் ஈர்க்கின்றது. அவர்கள் யாரையும் பொருட்படுத்தாமல், புள்ளிமானெனத் துள்ளி, ஆடிப்பாடி விளையாடித் திரிகிறாள். அறிவும் ஆற்றலும் அழகும் ஒருங்கே அமையப்பெற்ற ஆணழகன் ஒருவன், அந்தப் புள்ளிமானை எப்படியேனும் பிடித்துவிடவேண்டும் என்று காதல் வலை வீசுகிறான். அந்தப் புள்ளிமான் அவனது காதல் வலையில் சிக்கிக்கொள்ளாமல் சிலகாலம் தப்பியோடிப் பார்க்கிறாள். அவ்விளைஞன் விடாமுயற்சியுடன் காதல் வேட்டையில் ஈடுபடுகிறான்.

அந்தப் பெண்ணரசிக்குத் தோழி ஒருத்தி உண்டு. அந்தத் தோழியின் நட்பு தலைவனுக்குக் கிட்டுகிறது. தலைவனின் முயற்சிக்குத் தோழியும் உடன்படுகிறாள்; ஒத்துழைப்பு தருகிறாள். இறுதியில் தலைவி காதல் வலையில் விழுகிறாள்; தலைவன் வெற்றிபெறுகிறான். தலைவனும் தலைவியும் உற்றார் உறவினர் யாருக்கும் தெரியாமல் களவொழுக்கத்தில் ஈடுபடுகின்றனர். இரவுக்குறிகளை ஏற்படுத்திக்கொண்டு காதலனும் காதலியும் ஒருவரையொருவர் கண்டுகொள்கிறார்கள். இரவுக்குறியிடத்துத் தலைவனிடம் தலைவியைக் கொண்டுவந்துசேர்க்கும் பணியினைத் தோழி திறம்படச் செய்துவருகிறாள்.

மகள் தக்க பருவம் அடைந்துவிட்ட காரணத்தாலும், ஆடவர் பலரின் பார்வை அவள்மீது விழுகின்ற காரணத்தாலும், இளைஞன் ஒருவன் அவள்மீது கண்ணோட்டம் செலுத்தி வீட்டின் முன்னிலையில் அடிக்கடி நடமாடும் காரணத்தாலும், அவளது பெற்றோர்கள், அவளை இனி வெளியே செல்லவிடலாகாது என்று கருதி, வீட்டுக்குள்ளேயே இருக்கும்படி செய்துவிடுகின்றனர். மகளைக் கண்காணித்துக்கொள்ளும்படியாகச் செவிலித்தாயிடம் கட்டளையிடுகின்றனர். தலைவி வீட்டிற்குள்ளேயே சிறைவைக்கப்பட்டவள் போல் ஆகிவிடுகிறாள்.

அன்று இரவு தலைவனை ஓரிடத்தில் காண்பதாகத் தலைவி தலைவனிடம் வாக்குறுதி தந்திருக்கிறாள். என்ன செய்வது, தலைவனை எப்படிக் காண்பது என்பனபோன்ற கவலைகள் தலைவியின் உள்ளத்தைக் குடைகின்றன. தலைவனைக் காணுவதற்கான வழியேதும் சொல்லும்படி தோழியிடம் கெஞ்சுகிறாள். தோழி நீடு நினைந்து பார்த்துவிட்டு ஏதொரு வழியும் புலப்படாமல் தவிக்கிறாள். இரவு தலைவனைக் காணமுடியாமற் போனால், தலைவன் என்ன நினைத்துக்கொள்கிறானோ, தன்னைக் கைவிட்டுவிடுவானோ என்றெல்லாம் எண்ணி ஏங்குகிறாள் தலைவி.

“எப்படியேனும் ஒரு வழி சொல்லடி!” என்று தலைவி தோழியைத் தொல்லைப்படுத்துகிறாள்.

“தாயும், தந்தையும், செவிலியும் உறங்கினதற்குப் பிறகு, அவர்களுக்குத் தெரியாமல் புறப்பட்டுப் போவோம். அதுவரையில் பொறுமையாய் இரு!” என்று தோழி ஆறுதல்மொழி கூறுகிறாள்.

இரவு நெருங்குகிறது. இரவுக்குறிக்குச் செல்லவேண்டிய நேரத்தின் வருகையைப் பற்றி எண்ணிக்கொண்டிருக்கிறாள் தலைவி. நற்றாயும் தந்தையும் உணவுண்டபிறகு நிலா முற்றத்தில் உட்கார்ந்து உரையாடிக்கொண்டிருக்கின்றனர். நீண்டநேரம் ஆகியும் அவர்கள் தூக்கங்கொள்ளவில்லை. செவிலித்தாயோ உறக்கங்கொள்ளாமல் மகளுக்குக் காவலாக அவள் வெளியேறாதபடி அருகில் படுத்துக்கொண்டிருக்கிறாள். இரவுக்குறியின் நேரம் வந்தும் வெளியேறமுடியாத நிலை ஏற்பட்டது

கண்டு தலைவி வேதனையுறுகிறாள்; அவளது உள்ளமோ துடியாய்த் துடிக்கிறது. என்ன செய்வதென்று தோன்றாமல் தோழி குழம்பிக் கொண்டிருக்கிறாள். இரவுக்குறியின் காலமும் கடக்கிறது; அப்பொழுதும் தாய்தந்தையர் தூக்கங்கொள்ளவில்லை. ஆயிரந்தேள் கொட்டினதுபோல் துன்புறுகிறாள் தலைவி. தலைவன் வந்து காத்திருந்துவிட்டு, வெறுத்துவிட்டுச் சென்றுவிட்டானோ, மீண்டும் காணவருவானோ வரமாட்டானோ, தான் அவனை இனி அடையமுடியுமோ முடியாதோ என்றெல்லாம் எண்ணித் தலைவி தனக்குள்ளாகவே புலம்பிக் கொண்டு, சோர்ந்து படுத்துக்கொண்டிருக்கிறாள். தலைவி வருந்துவதைக் கண்டு தோழி மனங்கலங்கிக்கொண்டு, வாயிற்படியில் உட்கார்ந்துகொண்டு, வெளியே பார்வையைச் செலுத்திக்கொண்டிருக்கிறாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் எல்லோரும் உறங்கிவிடுகிறார்கள். தலைவியும் தோழியும் மட்டும் விழித்துக்கொண்டேயிருக்கிறார்கள். தலைவி எழுந்து உட்கார்ந்து சுற்றுமுற்றிலும் பார்க்கிறாள்; யாவரும் உறங்கிக்கொண்டிருப்பதை அறிகிறாள். தோழியைப் பார்த்து, "ஏடீ! இப்பொழுது போகலாமாடீ, அவரைப் பார்க்க?" என்று மெல்லிய குரலில் கேட்கிறாள்.

"போடீ!...பைத்தியக்காரி! அவர் இன்னமுமா, அங்கேயே உட்கார்ந்துகொண்டிருப்பார் என்று கருதுகிறாய்? அவர் வீடுபோய்ச் சேர்ந்து பலநாழி ஆகியிருக்குமே!" என்று தோழி விடையிறுக்கிறாள்.

"அவர் இனிமேல் என்னைக் காண வருவாராடீ? ஊம்!...அவர் என்னைத் தேடிக்கொண்டு வரவாப்போகிறார்? ஒருநாளும் வரமாட்டார்!" என்று தலைவி தோழியிடம் சலிப்புடன் கூறுகிறாள்.

அபபொழுது, இரவுக்குறியிடத்தில் நீண்ட நேரம்வரையில் தலைவியின் வருகைக்காகக் காத்திருந்து பார்த்துவிட்டுத், தலைவி வராது போகவே, தலைவிக்கு வழியில் ஏதேனும் ஊறு நேரிட்டதோ என்று எண்ணி, மிக்கக் கவலையோடு, தலைவியின் வீடுநோக்கித் தலைவன் வந்துகொண்டிருப்பதைத் தோழி கண்டுவிடுகிறாள். என்றாலும் காணாதவள்போல் வேறு பக்கம் பார்வையைச் செலுத்திக்கொண்டு, தலைவியிடம் பேச்சு கொடுத்துக்கொண்டிருக்கிறாள். தலைவியும் தோழியும் ஏதோ பேசிக்கொண்டிருக்கிற மெல்லிய ஓசையைச் செவிமடுத்தத் தலைவன், அவர்கள் இருவரும் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்பதை ஆவலோடு அறியவேண்டி, வெளிச்சுவரின் பக்கம் மறைந்து நின்றுகொண்டு, உற்றுக் கேட்கத்தொடங்குகிறான்.

தான் பேசுவதைத் தலைவனும் உற்றுக் கேட்கிறான் என்பதைத் தெளிவாக உணர்ந்திருந்த தோழி, "ஏடீ! உன் காதலன் குறிப்பிட்டிருந்த இரவுக்குறி தவறிவிட்டதே என்று நீ மிகவும் வருந்துகிறாய்! சூட்டிக்கொள்ளாது வீசி எறியப்பட்ட பூமாலைபோல நீ வாடி வதங்கிவிட்டாய்! நீ உன் காதலரோடு கொண்டிருந்த களவொழுக்கத்தை ஊரார் அறிந்து பழிச்சொற்களை வீசும்படியான நிலைமையை உண்டாக்கிவிட்டுப், பிறகு அவர் உன்பால் வராமல் போய்விடுவாரோ என்று எண்ணுகிறாய்! அப்படி ஒருகாலும் எண்ணாதே! அப்படி ஏதேனும் எண்ணியிருந்தால் அந்த எண்ணத்தை இப்பொழுதே அகற்றிவிடு! ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால், உன்மீது பழிச்சொல் வீசும்படியான நிலைமை ஏற்படும் வரையில், அவர் பார்த்துக்கொண்டிருக்கமாட்டார்; நீ பழிச்சொல்லால் வருந்தாதபடிக்கு, உன்னை, விரைவில் அவர் மணம் செய்துகொண்டு, இல்லறம் நடத்துவதற்கு ஒருப்பட்டுவிடுவார்! பின் ஏன் நீ வருந்த வேண்டும்?" என்று கேட்கிறாள்.

"அவர் விரைவில் என்னை மணந்துகொள்வார் என்று உனக்கு எப்படியடீத் தெரியும்?" என்று தலைவி வினவுகிறாள்.

"எப்படித் தெரியும் என்றா கேட்கிறாய்? அவர் உன்னைத் தேடி வரும்போது வழியில் ஏற்படும் நிகழ்ச்சி, அவருக்கு, நான் சொன்ன கருத்தை நினைவூட்டும் என்பது எனக்குத் தெரியும்!" என்கிறாள் தோழி.

அதற்குத் தலைவி, "என்னடி அப்படி வழியில் நிகழ்ச்சி ஏற்படும்?" என்று கேட்கிறாள்.

"அவர் தேரில் ஏறிவரும்போது, அலை வந்து மோதுதலால் ஏற்பட்ட மணல் குவிந்த கடற்கரையின் கண்ணே வரவேண்டி ஏற்படும். அந்த மணலில் நண்டுகள் ஊர்ந்துகொண்டிருக்கும். அந்த நண்டுகளின்மேல் தேரின் உருளைகள் ஏறிவிடாதவாறு நண்டுகளை விலக்கித் தேர்ப்பாகன், வாரைப்பிடித்து இழுத்து, மெல்ல குதிரைகளைச் செலுத்துவான். இதற்கு வெள்ளை வெளேரென்று வீசும் வெள்ளிய கதிர்களையுடைய நிலவின் ஒளி அவனுக்கு உதவியாக இருக்கும்! இந்தக் காட்சியைக் காணும் தலைவர் உன்னை விரைவில் மணந்துகொள்ள ஒருப்படுவார் என்பது திண்ணம்!" என்று தோழி கூறுகிறாள்.

"அந்தக் காட்சிக்கும், என்னை அவர் மணந்துகொள்வதற்கும் என்னடி தொடர்பு?" என்று தலைவி கேட்கத், தோழி சிரித்துக் கொண்டே, "தொடர்பு இருக்கிறதடி இருக்கிறது! நண்டுகள் தேர்க்காலில் அகப்பட்டு அவதியுறக்கூடாது என்று எப்படித் தேர்ப் பாகன் கருதுகிருனே, அப்படி நீ பழிச்சொல்லால் அவதிப்படக்கூடாது என்று தலைவர் எண்ணியே தீருவார்! வெட்டவெளிச்சம் தரும் நிலவொளி தேர்ப்பாகனுக்கு உதவியாக இருப்பதைப்போல, ஊரில் வெட்ட வெளிச்சமாகும் அலர், தலைவர் மணம்புரிந்து கொள்ளவேண்டியதன் இன்றியமையாமையை உணர்த்துவதற்கு உதவியாக அமைவதாகும்!" என்று கூறுகிருள்.

"தோழி! நீ சொல்லுகிறபடி எல்லாம் நடந்தால்தான் எனக்கு ஒரு துன்பமும் கிடையாதே!" என்று தலைவி சொல்லுகிருள்.

தோழி—தலைவி உரையாடலின் மூலம், அவர்களின் உள்ளக்கிடக்கையைத் தலைவன் தெளிவாகப் புரிந்துகொள்கிருன். திருமணம் செய்துகொள்ள முன்வருவதன் மூலம், விரைவில் தலைவியை அடையலாம் என்ற உறுதியோடும், உவகையோடும் தலைவன் அவ்விடம் விட்டு அகல்கிருன். தலைவனுக்கு நிலைமையை உணர்த்திவிட்டோம் என்ற மகிழ்வோடு தோழி மன ஆறுதல் பெறுகிருள்.

தலைவன் திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்கிருன்; தலைவியும் தோழியும் அச்செய்தியை அறிந்து மட்டிலா மகிழ்ச்சியுறுகின்றனர்!

ஃ ஃ ஃ

இது, நற்றிணை 11-ஆம் பாடலில் கண்டுள்ள கருத்துக்களை உள்ளடக்கிக்கொண்டு தீட்டப்பட்ட சொல்லோவியமாகும். இதனைப் பாடியவர் உலோச்சனர் என்ற புலவராவார்.

பெய்யாது வைகிய கோதை போல
மெய்சா யினையவர் செய்குறி பிழைப்ப
உள்ளி நோதுமே லேர்புரை தெள்ளிதின்
வாரா ரென்னும் புலவி உட்கொளல்
ஒழிக மாளநின் நெஞ்சத் தானே
புணரி பொருத பூமண லடைகரை
ஆழி மருங்கின் அலவன் ஓம்பி
வலவன் வள்பாய்ந் தூர
நிலவுவிரிந் தன்றாற் கான லானே.

[நற்றிணை—11]

[பொழிப்புரை : அவர் செய்த இரவுக்குறி இடையீடுபட்டுத் தவறிப்போதலாலே, சூடாது கிடந்த பூமாலையைப்போல நீ உடல் வாடினையாகி, அயலார் சொல்லக்கூடிய பழிச்சொல்லைக் கருதி; இனித் திண்ணமாக அவர் நம்பால் வருவாரல்லர் என்னும் புலவியை உட்கொள்ளாது, நினது உள்ளத்தினின்றும் அந்தக் கருத்தை விட்டுவிடுவாயாக! அலைவந்து மோதுதலால் ஏற்படும் இள மணல் குவிந்த கடற்கரையின்கண்ணே, தாம் ஏறிவருகின்ற தேரின் உருளையிடத்துப் படாதவாறு நண்டுகளை விலக்கிப், பாகன் வாரைப்பிடித்து ஆராய்ந்து, தேரினைச் செலுத்துமாறு, கானலிடத்து நிலவு விரிந்தது. கோதை - மாலை; செய்குறி - செய்த இரவுக்குறி; உள்ளி - கருதி; புலவி - ஊடல்; புணரி - அலை; ஆழி - உருளை; அலவன் - நண்டு; வலவன் - தேர்ப்பாகன்.]

ஃ ஃ ஃ

காதலனும் காதலியும் தாய்தந்தையர்க்குத் தெரியாமல் களவொழுக்கத்தில் ஈடுபடுவதும், மகளின் களவொழுக்கத்தைத் தாய் தந்தையர்கள் பிறகு எப்படியோ அறிந்துகொள்வதும், அறிந்துகொண்டவுடன் மகளைக் கடிந்துரைத்

வடக்கும்—தெற்கும்

தொழில் வளர்ச்சித் திட்டங்கள்

எந்த ஒரு நாடு, பொருளாதார நிலையில் மிக விரைவில் உயரவேண்டும் என்று விரும்புகிறதோ, அந்த நாடு, தன் பொறித்தொழிலுற்பத்தியைப் பெருக்குவதிலே கண்ணுங் கருத்துமாக இருந்துவருவதைக் காணலாம்.

இன்றைய உலகில் உழவுத்தொழிலை நம்பி வாழும் நாட்டைக்காட்டிலும், பொறித்தொழிலை நம்பி வாழும் நாடுதான் மிக ஏற்றங் கொண்டதாக இருக்கிறது. உழவுத் தொழிலில் வரும் வருவாயைக்காட்டிலும், பொறித்தொழிலில் கிடைக்கும் வருவாய் பன்மடங்கு மிகவாகும். உழவுத்தொழிலில் குறிப்பிட்ட அளவு குறைந்த வருவாயைத்தான் நிலையாக எதிர்பார்க்கமுடியும். ஆனால் பொறித்தொழிலில், குறைந்த அளவு விலைமதிப்புள்ள மூலப்பொருளை மக்களுக்குத் தேவையான, பயன்படும் பொருளாக உருமாற்றும்போது, பல மடங்கு விலைமதிப்புள்ள செயப்படு பொருளாக ஆகிவிடுகிறது. உலகச் சந்தைகளைப் பிடித்துக்கொள்ளும் திறனும், நாட்டின் வருவாயை ஒன்று—பத்து—நூறு—ஆயிரம் — இலக்கம் மடங்கு மிகவாக ஆக்கிக்காட்டும் திறனும் பொறித் தொழிலுக்குத்தான் உண்டு. உழவுத் தொழில், பெரும்பாலான நாடுகளில் உள்நாட்டுத் தேவையை நிறைவேற்றித் தருவதற்கே இழுப்பு வழுப்பு கொண்டதாகத்தான் இருக்கும். பொறித் தொழிலில் குறைந்த முதலில் நிறைந்த வருவாயை எதிர்பார்க்கலாம்; ஆனால் உழவுத் தொழிலில் நிறைந்த முதலில் குறைந்த வருவாயைத்தான் எதிர்பார்க்க வேண்டிவரும். உழவுத் தொழில் நாட்டைப், பொறித்தொழில் நாடு அடக்கி, ஆதிக்கம் செலுத்தி அடிமைகொள்ளும் நிகழ்ச்சியைத் தான், வரலாற்றின் புதிய ஏடுகள் நமக்கு விரித்துரைக்கின்றன.

இந்தியத் துணைக்கண்டம் பொதுவாக உழவுத்தொழில் நாடு என்றாலும் வடக்கு பொறித் தொழிலில் வளர்ந்துகொண்டு போவதையும், தெற்கு இருந்த நிலையிலேயே குந்திக்கிடப்பதையும் பார்க்கலாம். வடநாட்டு ஆதிக்கத்தால் ஆட்டிப்படைக்கப்படும் இந்தியப் பேரரசு, வடநாட்டை வாழவைக்கவும், தென்னாட்டை அதற்கு அடிமையாக்கவும் எப்படியெல்லாம் திட்டம் தீட்டிவருகிறது என்பதை, அது எடுத்துக்கொண்டிருக்கும் பொறித்தொழில் முயற்சிகளை, வடக்கிற்கும் தெற்கிற்கும் ஒப்பிட்டுப் பார்த்தால் எளிதில் விளங்கிக்கொள்ளலாம்.

வடக்கே உள்ள முக்கிய தொழிற் திட்டங்கள்

1.	இரும்பு—எஃகுக் கம்பெனி (முன்பே உள்ளது)	ரூ. 110·00 கோடி
2.	இரும்—எஃகு உருக்குத்தொழிற்சாலை (ருசியா கூட்டுறவில்)	ரூ. 104·00 ,,

---

துக் காவற்படுத்துவதும், தலைவி வெளியேற முடியாமல் வேதனைப்படுவதும், தலைவியின் துன்பத்தைத் தலைவனுக்குத் தோழி எடுத்துரைத்துத் தலைவனை விரைவில் வந்து மணம் புரிந்துகொள்ளும்படி அறிவுறுத்துவதும் ஆன காதற்காட்சிக் குறிப்புகள், இக்செய்யுளின் மூலம் அழகுபட உணர்த்தப்படுகின்றன.

தலைவிக்குச் சொல்லுவதுபோல, மறைந்து நின்று கேட்கும் தலைவனுக்குத் தோழி சொல்லும் பாங்கு போற்றுதற்குரியதாகும்.

தலைவி, தலைவன் காரணமாக இரங்குதல் சிறப்பாகக் கூறப்படுவதால், இது நெய்தல் ஒழுக்கத்தைச் சார்ந்ததாகும். நெய்தல் ஒழுக்கத்திற்கேற்பக், கடற்கரைப்பரப்பையும், மணல்முட்டுக்களையும், அவற்றில் நண்டுகள் நடமாடுவதையும், அந்த மணலில் தேரின் உருளைகள் பதிந்து செல்வதையும், தேர்க்காலில் நண்டுகள் படாதவாறு தேரில் பூட்டிய குதிரைகளை இழுத்துப் பிடித்து ஆராய்ந்து தேர்ப்பாகன் மெல்ல ஓட்டுவதையும் கூறியிருப்பது இயற்கை இன்பம்பயப்பதாகும்.

நண்டுகளின்மேல் படாதவாறு, தேரினைப் பாகன் ஓட்டிச்செல்லும் இயல்பான நிகழ்ச்சியைச் சொல்லுவதன் மூலம், தலைவியின்மீது பழிச்சொல் விழாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு தலைவனைச் சார்ந்தது என்பதை உணர்த்தாமல் உணர்த்தும் உள்ளுறை உவமம் நினைந்து மகிழ்வதற்குரியதாகும்.

3.	இந்துச்தான் இரும்பு—எஃகுத் தொழிற்சாலை (செர்மன்கூட்டுறவில்)	ரூ.	33·00	கோடி
4.	சிந்திரி உரத்தொழிற்சாலை	,,	27·40	,,
5.	பொறி—கருவிகள் தொழிற்சாலை	,,	19·56	,,
6.	சித்தரஞ்சன் இரயில்வே என்சின் தொழிற்சாலை	,,	14·90	,,
7.	பட்டுத் தொழிற்சாலை	,,	5·81	,,
8.	நேபா காகிதத் தொழிற்சாலை	,,	4·25	,,
9.	பென்சிலின் தொழிற்சாலை	,,	4·22	,,
10.	தேசிய துணைக்கருவிகள் தொழிற்சாலை	,,	3·72	,,
11.	அரசாங்கச் சிமெண்ட் தொழிற்சாலை	,,	3·80	,,
12.	மண்டி உப்புத் தொழில்	,,	2·00	,,
		ரூ.	332·66	,,

தெற்கே உள்ள முக்கிய தொழிற் திட்டங்கள்

1.	வலுவான மின் பொறித் தொழிற்சாலை	ரூ.	35·00	கோடி
2.	இந்துச்தான் கப்பற்கட்டும் தொழிற்சாலை	,,	32·25	,,
3.	இரயில்வே பெட்டிவண்டித் தொழிற்சாலை	,,	8·00	,,
4.	மைசூர் இரும்பு—எஃகுத் தொழிற்சாலையின் விரிவாக்கம்	,,	5·10	,,
5.	இந்துச்தான் கேபிள் உற்பத்தித் தொழிற்சாலை	,,	2·60	,,
6.	இந்தியன் தொலைபேசி (டெலிபோன்) தொழிற்சாலை	,,	2·50	,,
		ரூ.	85·45	,,

தென்னாட்டில் ரூ. **85·45** கோடிக்குத்தான் திட்டங்கள்; வடநாட்டில் ரூ. **332·66** கோடிக் குத் திட்டங்கள். மேலும் வடநாட்டில், வரும் ஆண்டுகளில் பிரித்தானியர் கூட்டுறவோடு ரூ. 80 கோடி செலவில் பீகாரிலாவது அல்லது மேற்கு வங்கத்திலாவது இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஒன்று நிறுவத் திட்டமிடப் பட்டிருக்கிறது. சித்தரஞ்சன் என்சின் தொழிற்சாலையை ரூ. 50 கோடிக்குமேல் செலவு செய்து பெருக்கத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. பக்காரா—நங்கல் பகுதியில் நூற்றுக்கணக்கான கோடி ரூபாயில் அணு ஆற்றல் ஆராய்ச்சிக்கூடமும், உற்பத்திச் சாலையும் கட்ட இந்தியப் பேரரசால் திட்டமிடப்பட்டிருக்கிறது. இவைபோன்ற பலப்பல! இவற்ருல் வளர்ச்சி வடக்கிற்கா?—தெற்கிற்கா? ஆய்ந்து பார்மின்!

●●

குறைவிலையில் பெருங்காய்

குறைவான விலையில் பெரிய மாங்காய் வாங்கவேண்டும் என்று ஒரு கிழவி தனது பத்துவயது ப் பேரனிடம் இரண்டு காலணுக்களைக் கொடுத்து மாந்தோப்பிற்கு அனுப்பினுள்.

மாந்தோப்பிற்குள் நுழைந்த சிறுவன் தோட்டக்காரனை அழைத்து ஒரு கிளையின் நுனியில் தொங்கிக்கொண்டிருந்த ஒரு பெரிய மாங்காயைச் சுட்டிக்காட்டி, "எனக்கு அந்த மாங்காய் வேண்டும். அதற்கு நான் எவ்வளவு பணம் தரவேண்டும்?" என்று கேட்டான்.

"ஒரணு குடு தம்பி" என்று தோட்டக்காரன் பதிலளித்தான்.

"என்னிடம் காலணுதான் இருக்கிறது" என்று தெரிவித்தான் பையன்.

"அதற்கு அந்தச் சிறிய காய்தான் கிடைக்கும்" என்று வேருெர் இடத்தைக்காட்டினுன் தோட்டக்காரன்.

"அப்ப சரி இந்தக் காலணுவை வைத்துக்கொள். நான் பத்துதினங்கள் கழித்துவந்து அதைப் பெற்றுக்கொள்கிறேன்" என்று கூறி காலணுவைத் தோட்டக்காரன் கையில் திணித்து விட்டு ஓடினுன் சிறுவன்!

வினாவும் விளக்கமும்

ரசியாவைப்போல் அமெரிக்காவைப்போல் ஐக்கிய இந்தியாவை உருவாக்கக்கூடாதா?

ஐக்கிய இந்தியாவை உருவாக்கக் கூடாது என்பதல்ல, உருவாக்க முடியவில்லை.

'ஐக்கிய இந்தியா' என்ன, 'ஐக்கிய ஆசியா' வையேகூட உருவாக்கலாமே! 'ஐக்கிய ஆசியா' என்ன "ஐக்கிய உலகத்"தையே கூட உருவாக்கலாமே! உருவாக்கக்கூடாது என்பதல்ல தி. மு. கழகத்தின் கொள்கை, உருவாக்க முடியாது-முடியவில்லை என்பதுதான். அந்த அளவுக்கு உலகநாடுகள் பலவும் தாம் தனித்து வாழவேண்டும் என்று கொண்டிருக்கும் விருப்பமும், இன்றியமையாமையும், சூழ்நிலையும் இடந்தருவதில்லை.

உலகில் நாடுகள் என்று குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய நாடுகள் ஏறத்தாழ 97 இருக்கின்றன. அவற்றில் திராவிடத்தைவிட பெரிய நாடுகள் 8 தான்; திராவிடத்தைக் காட்டிலும் சிறிய நாடுகள் 89 இருக்கின்றன. மிகமிகச் சிறியநாடு, போப்பாண்டவர் ஆளுகிற வாட்டிகன் சிட்டி. அதனுடைய மக்கள் தொகை 1000 பேர். மிகப்பெரியநாடு செஞ்சீனு. அதன் மக்கள் வளம் 46 கோடி.

திராவிடத்தைவிடப் பெரியநாடுகள் இருக்கின்றனவே என்று யாரேனும் கூற முனவந்தால், அவர்கள் 8 நாடுகளைத்தான் சுட்டிக் காட்டமுடியும். நாமோ திராவிடத்தைவிடச் சிறியநாடுகள் 89 இருக்கின்றனவே என்று அவர்களுக்குச் சுட்டிக்காட்டலாம். திராவிடம் தனி நாடாக வாழலாம் என்பதற்குப் பதினைரு மடங்கு மிகவான எடுத்துக்காட்டுகள் இருக்கவே செய்கின்றன.

அமெரிக்காவும் ரசியாவும் பெரிய நாடுகளாக வாழுகின்றன என்றால், அந்த அளவுக்கு ஐக்கியப்படுத்தும் ஏதுக்கள் அவைகளிடத்தே நிலவுகின்றன என்றுபொருள். பிற சின்னஞ்சிறு நாடுகளெல்லாம் பலவாகக்கூடி ஏன் ஐக்கிய ஆட்சி அமைப்பில் வரவில்லை என்றால், அவைகள் அத்தகைய ஐக்கிய ஆட்சி அமைப்பில் வருவதற்கான ஏதுக்கள் ஏற்படவில்லை என்று பொருள். சூழ்நிலையும், இன்றியமையாமையும் இடம்—பொருள்—கருவி—காலத்தைப் பொறுத்து நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. உலகில் உள்ள ஒவ்வொரு நாடும் தனித்தனியாக வாழ்வது நல்லதா அல்லது ஐக்கியப் பகுதியாகச் சேர்ந்து வாழ்வது நல்லதா என்று தனித்தனிக் கணக்குப் போட்டுக்கொண்டு, அதற்கேற்பத் தனியாகவோ அல்லது ஐக்கியமாகவோ வாழத் தலைப்பட்டிருக்கின்றன. அதுபோல திராவிடம் வட இந்தியாவோடு இணைந்து வாழுவது நல்லதா அல்லது பிரிந்து வாழ்வது நல்லதா என்று கணக்குப் போட்டுப் பார்த்தால், பிரிந்து தனித்து வாழ்வதுதான் எல்லாவகையிலும் சிறந்தது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

அமெரிக்கா. ரசியா ஆகியவைகளில் ஏற்படாத வடநாடு—தென்னாடு என்ற பிளவும், வேற்றுமையும், திராவிடம் பிரிந்து செல்லத்தான்வேண்டும் என்ற அளவுக்கு, இந்தியாவில் ஏற்பட்டிருக்கின்றன. அமெரிக்காவில் கூட வடபகுதி—தென்பகுதி என்ற பிளவு மனப்பான்மை உண்டு என்றாலும், ஒரு பகுதி தனி நாடாகப் பிரிந்து செல்லத்தான் வேண்டும் ஒன்ற சூழ்நிலை அங்கு ஏற்படவில்லை; ஆனல் இந்தியாவில் ஏற்பட்டுவிட்டது. கோரிக்கைகள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. திராவிடத்தைப் பொருத்தவரையில் இணைந்துபோகும் கோரிக்கைகளைக் காட்டிலும், தனி நாடாகப் பிரிந்து நிற்பதற்கான கோரிக்கைகள்தாம் ஏராளமாக இருக்கின்றன.

அண்ணன் தம்பிமார்கள் சேர்ந்துவாழும் குடும்பங்களும் உண்டு; சேர்ந்து வாழமுடியாமல் பிரிந்துவாழும் குடும்பங்களும் உண்டு. அமெரிக்கா, ரசியா போன்ற நாடுகள் குறைந்த அளவுத் திட்டத்தில், சேர்ந்துவாழும் குடும்பங்களாக இருக்கின்றன; ஆனல் இந்தியாவோ பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து வாழும் குடும்பமாக இருக்கின்றது.

இந்தியத் துணைக்கண்டத்தை எடுத்துக் கொண்டால், இந்தியா—பாக்கிஸ்தான் என்ற

இரண்டு குடும்பங்களாகத்தான் பிரிந்திருக்கின்றது. இதே அளவு நிலபரப்புக்கொண்ட ரசியா நீங்கின ஐரோப்பாக் கண்டத்தை எடுத்துக்கொண்டால், அது ஏறத்தாழ 32 நாடுகளாக அதாவது குடும்பங்களாகப் பிரிந்திருக்கின்றது. இந்தியா இரு குடும்பமாக இப்பொழுது இருக்கும்போது, இதே அளவு நிலப்பரப்புக்கொண்ட ஐரோப்பாவும் ஏன் இரு குடும்பமாக மட்டும் பிரிந்திருக்கக்கூடாது என்று கேட்பதிலே, எவ்வளவு அரசியல் அறிவும் தெளிவும் உண்டோ, அதே அளவு அறிவுத் தெளிவுந்தான் உண்டு, இந்தியா ஏன் அமெரிக்காவைப்போல், ரசியாவைப்போல் வாழக்கூடாது என்று கேட்பதிலும்.

வடநாடு—தென்னாடு என்ற பிளவும் வேற்றுமையும் நாளுக்குநாள் வளர்கின்றனவே ஒழியக் குறையவில்லை. இல்லாத ஒன்றை நாமே உற்பத்தியாக்கவில்லை; இருக்கும் ஒன்றை—வளரும் ஒன்றை நாம் சுட்டிக்காட்டத்தான் செய்கிறோம்.

அமெரிக்கா—ரசியா போன்ற நாடுகளை 'இந்தியா'விற்கு எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளாமல், 'திராவிடத்துக்கு' எடுத்துக்காட்டுகளாக ஒருவகையில் கொண்டு. திராவிடத்தைத் தனி நாடாகப் பிரித்துத், தமிழ்—தெலுங்கு—கன்னடம்—மலையாளம் என்ற மொழிவழிப் பகுதிகளின் கூட்டாட்சி அமைப்பிலே அமைப்பதுதான், திராவிடத்திற்கு எல்லாவகையிலும் நன்மை பயக்கும் அரும் பெருஞ் செயலாகும்.

❖ ❖ ❖

ஆந்திரரும், கன்னடியரும், கேரளரும் இசையாதபோது "திராவிடநாடு" என்று கூறுவதில் உன்ன பொருள் இருக்கிறது ?

இப்படிக் கேட்பதில்தான் பொருள் இல்லையே தவிர, "திராவிடநாடு" என்று கேட்பதில்—கூறுவதில் ஏராளமான பொருள் இருக்கின்றது.

ஆந்திரரும், கன்னடியரும், கேரளரும் திராவிடநாடுக் கூட்டாட்சி முறையை ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்று முடிவுகட்டி முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்கள் என்று எதைக்கொண்டு கூறுகிறார்களோ இத்தகைய கேள்விகேட்போர், தெரியவில்லை! அவர்களையெல்லாம் இசையவைக்கும் போதுமான முயற்சிகளையே திராவிட முன்னேற்றக் கழகம் இன்னமும் எடுக்கவில்லையே! முயற்சிகள் எடுப்பதற்குப் போதுமான வாய்ப்புகளும் வசதிகளும் ஏற்படவில்லை; ஏற்படுத்திக் கொள்ளும் எண்ணத்தில் ஈடுபட்டிருக்கிறது. தி. மு. கழகக் கொள்கைகளை ஆந்திரம்—கருநாடகம்—கேரளம் ஆகிய பகுதிகளில் பரப்புவதற்கான வாய்ப்புகளும் வசதிகளும் தி. மு. கழகத்திற்கு எந்த ஒருநாளும் ஏற்படாது என்றோ, அங்குள்ள மக்கள் கொள்கைகளை எந்த ஒரு நாளிலும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றோ எப்படித் துணிந்து கூறுவார்கள் மாற்றார்கள்? அவர்கள் என்றைக்கேனும் ஒருநாள்— அண்மையில்தான் — உணருவார்கள் என்ற உறுதிப்பாடு தி. மு. கழகத்திற்கு நிரம்ப உண்டு.

1885-ஆம் ஆண்டு காங்கிரசு ஏற்பட்டவுடனேயே, இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் அதன் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளவில்லையே! ஏன் பல ஆண்டுகள் வரையில் ஏற்றுக்கொள்ளவில்லையே! அப்படிப்பட்டக் காங்கிரசு இன்று தன்னாட்சி நோக்கத்தில் வெற்றி பெறுமலா போய்விட்டது? ஒருகாலத்தில் நீதிக்கட்சியோடு போட்டி போட்டக் காங்கிரசு, பலதடவைகள் தோற்றுத்தான் போயிருக்கிறது. காங்கிரசுக் கொள்கைகளை நாடு ஒருநாளும் ஏற்றுக்கொள்ளாது என்று அப்பொழுது முடிவு செய்யப்பட்டது? இல்லையே! கொள்கை என்றேனும் ஒருநாள் பரவும் என்ற உறுதிப்பாடு அதனிடத்தே இருக்கத்தானே செய்தது! அதைப்போன்றதொரு உறுதிப்பாடு, தி. மு. கழகத்திற்கு இருப்பது, பொய்த்துப் போய்விடும் என்று எப்படி இப்பொழுது அறுதியிட்டுக் கூறுகிறார்களோ தெரியவில்லை!

எத்தனையோ சிற்றூர், பேரூர், நகரங்களில் கம்யூனிசக் கொள்கைகள் இப்பொழுது பரவவில்லை; அந்தக் கொள்கைகளுக்கு ஆதரவும் ஏற்படவில்லை. அதனால், கம்யூனிசக் கொள்கைகள் என்றென்றும் பரவாது என்ற முடிவுக்கு அந்தக் கட்சியினர் வந்துவிடவில்லையே! மக்களெல்லாம் இசையாதபோது, ஏன் கம்யூனிச்டுக் கட்சி என்று ஒன்று இருக்கவேண்டும் என்று யாரும் கேட்பதில்லையே! என்றைக்கேனும் ஒருநாள் வெற்றிபெற முடியும் என்ற உறுதிப்பாடு அக்கட்சியாரிடத்தில் இன்னமும் இருக்கத்தானே செய்கிறது!

தமிழகத்தின் பல சிற்றூர் பேரூர்களில் இயக்கக் கருத்துக்கள் பரவாத நிலையில், அத்தகைய ஊர்கள் இயக்கக் கருத்துக்களுக்கு இசைவு தரவில்லை என்றுதான் கூறப்பட்டது. ஆனால் நாளடைவில் கருத்துக்கள் மக்களது செவிகளில் விழத்தொடங்கியவுடன், அவை

கள் அவர்கள் உள்ளத்திலே பதிந்து, அவர்களது ஆதரவைத் திரட்டித்தரத்தான் செய்தன, இசைவுதராதவை என்று கருதப்பட்ட எத்தனையோ ஊர்கள் இப்பொழுது கழகக் கோட்டைகளாக மாறியிருக்கின்றனவே! தமிழகத்தில் எப்படிக் கொள்கைகள் மெல்ல மெல்ல பரவுகின்றனவோ, அதுபோல ஆந்திரத்திலும், கருநாடகத்திலும், கேரளத்திலும் அவை மெல்ல பரவியேதீரும்.

தி. மு. கழகம் தமிழகத்தில் நாளடைவில் முழு ஆதரவும், வலிவும் பெற்ற அமைப்பாக மாறிவிடும்போது, பிற பகுதித் தலைவர்களோடு அது வைத்துக்கொள்ளும் பேச்சு வார்த்தைகள், உருவான பலனைத் திரட்டித் தரும் என்ற உறுதிப்பாடும் கழகத்திற்கு இருக்கிறது. வடநாட்டு ஆதிக்கத்தினின்றும் பிரியவேண்டும் என்ற எண்ணம் விரைவில் ஆந்திர—கருநாடக—கேரளத் தலைவர்களிடத்தில் ஏற்படும் என்பது உறுதி. அப்பொழுது கழகக் கொள்கைகள் அவர்களுக்கு நல்ல தெளிவைப் பயக்கும். தலைவர்கள் திராவிடக் கூட்டாட்சி முறையை ஏற்றுக்கொள்ள இசையும்போது, அவர்கள் சார்ந்திருக்கும் கட்சிகளும், கட்சிகளின் செல்வாக்குப் பரவியுள்ள பகுதிகளும் அந்த முறைக்கு இசையவே செய்யும்.

திராவிடக் கூட்டாட்சி எளிதானது—அமையக்கூடியது—பலனளிப்பது. இதனைக் காலம் உண்மையாக்கிக்காட்டும்!

✤ ✤ ✤

"சினிமாவை விடு சிலம்பை எடு" என்ற கொள்கையைத் திராவிட முன்னேற்றக் கழகம் பின்பற்றத் தயங்குவானேன்?

"சினிமாவைவிடு சிலம்பை எடு" என்ற கொள்கையை யார்—எந்தக் கட்சியார் காரசாரமாக நாட்டில் பரப்பிவந்தார்களோ, அந்தக்கட்சியார்தான், அந்தக் கொள்கையைக் காற்றிலே பறக்கவிட்டு வேடிக்கைப் பார்க்கிறார்கள். கொள்கையைப் பின்பற்றுதலிலே தயக்கம் ஏன் என்று அதன் உற்பத்தியாளர்களையும் விற்பனையாளர்களையும் பார்த்து மேற்கண்ட கேள்வியைக் கேட்கும் தோழர் கேட்டிருக்கவேண்டும். ஆனால் அவர் தவறுதத்திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்துக் கேட்கிறார்; இரக்கத்திற்குரியவர்!

"சினிமாவையும் போற்றலாம்; சிலம்பையும் எடுக்கலாம்" என்ற கொள்கை வேண்டுமானால் தி. மு. கழகத்திற்கு உடன்பட்ட ஒன்றாக இருந்து வரலாமேயொழிய, "சினிமாவை விடு சிலம்பை எடு" என்ற கொள்கையைத் தி. மு. கழகம் ஏற்றுக்கொண்டதில்லை. ஏற்றுக்கொண்டு நேர் மாறாக நடந்துகாட்டினால் அல்லவா, "பின்பற்றத் தயங்குவானேன்?" என்ற கேள்வியைக் கேட்பதில் பொருள் இருக்கமுடியும்?

சொல்வன்மையும் எழுத்து வன்மையும் கொண்ட தி. மு. கழகத் தோழர்கள் அத்தனைப்பேரும் ஏன் சினிமாக்கதை வசனம் எழுதாமல் இருக்கிறார்கள், அத்தத் துறையை ஏன் முழுக்க முழுக்கக் கைப்பற்றாமல் இருக்கிறார்கள், விரல்விட்டு எண்ணக்கூடிய மிகமிகச் சிலர் மட்டுந்தானே அத்துறையில் இறங்கியிருக்கிறார்கள், இந்த எண்ணிக்கை போதாதே என்று வேண்டுமானால் தி. மு. கழகம் கவலைப்படுமேயல்லாமல், சினிமாவை விடவேண்டும் என்று எண்ணியதுமில்லை; கூறியதுமில்லை. சினிமாவை அடியோடு வெறுத்தொதுக்க வேண்டும் என்று கூறிவரும் கட்சிக்காரர்கள், தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் சினிமாவில் நடிக்காமலும், சினிமாக் கதை வசனம் எழுதாமலும், தங்கள் நாளிதழில் சினிமா விளம்பரம் செய்யாமலும் பார்த்துக்கொள்வார்களேயானால், அவர்களைக் கொள்கை நாணயம் உடையவர்களாகக் கருதமுடியும். கொள்கை நாணயத்தைக் காற்றிலே பறக்கவிட்டுவிட்டுத், தங்கள் கட்சிக்காரர்களையே சினிமாத் துறையில் நுழையும்படி விட்டுவிட்டு, பிற கட்சிக்கு அறிவுரை கூறச் சிலர் கிளம்பிவிடுகிறார்கள் என்றால், அவர்களை என்னென்று செப்புவது.

சினிமாத்துறையில், தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் இறங்கியுள்ள காரணத்தால் தி. மு. கழகம் அழிந்துவிடும் என்று இதற்காகப் பிற கட்சியார் கவலைப்படுவானேன்; நன்றாக உளம்பொங்க மகிழ்ச்சி கொள்ளலாமே! சினிமாவோடு ஈடுபடுவதால் தி. மு. கழகம் வளருமா, அல்லது அழிந்படுமா என்பதைத் தி. மு. கழகத்தவர்கள் கவலைப்பட்டுக்கொள்கிறார்கள். இதனை அழித்தொழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் 'வீரர்கள்' இதுபற்றிக் கவலைப்படுவானேன்; தங்கள் கட்சியார்கள் நுழையாமல் பார்த்துக்கொண்டு, தங்கள் கட்சியைத் தூய்மைப்படுத்திக்கொள்வதுதானே அவர்களது கடமை. ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுவானேன்

தி. மு. கழகத்தைப் பார்த்துச் "சினிமாவை விடு" என்று சொல்கிறார்கள் என்றால், அதன் வளர்ச்சியிலே அக்கறை கொண்டா என்றால், இல்லை; அதன் வளர்ச்சி கண்டு ஏற்பட்ட பொறாமை! பொறாமை!! பொறாமை!!!

அரைக் கால் சட்டை (ஆப்பேண்ட்)

இக்கால்சட்டைக்கு இடுப்புப்பட்டி அகலம் 2 அங்குலம் முதல் 4 அங்குலம் வரை அணிபவரின் விருப்பப்படி அமைக்கலாம்.

இங்கு விளக்கப்பட்டுள்ள கால்சட்டைக்கு இடுப்புப்பட்டி அகலம் 2 அங்குலம் அமைந்ததாகும். கால்சட்டைகளுக்கு புட்டம் சுற்றளவில் பாதியை மூல அளவு எனக்கொள்ள வேண்டும்.

அளவுகள்

நெடுங் கால் நீளம்	20	அங்குலம்
அடிக்கால் நீளம்	8	,,
இடுப்புச் சுற்றளவு	30	,,
புட்டம் சுற்றளவு	36	,,
முன்கால் சுற்றளவு (பாட்டம்)	30	,,
மூல அளவு (ஸ்கேல்)	18	,,

படம்—1

1-ல் இருந்து 0 வரை 18¼ அங். (முழுநீளம் +¼ அங். 20¼ அங். இடுப்புப்பட்டி அகலம் 2 அங். குறைவு.)

2-ல் இருந்து 1 வரை 3 அங். (முன்னங்கால் மடிப்பு)

3-ல் இருந்து 1 வரை 8¼ ,, (அடிக்கால் நீளம்+¼ அங்.)

B-ல் இருந்து 3 வரை 3 ,, (1/6 ஸ்கேல் அளவு)

4-ல் இருந்து 3 வரை 7 ,, (1/3 ஸ்கேல் அளவு +1 அங்.)

5-ல் இருந்து 4 வரை 3½ அங். (1/6 ஸ்கேல் அளவு +½ அங்.)

6-ல் இருந்து 5 வரை 1·5/8 அங். (7. 5-க்கும் உள்ள அளவில் பாதி)

7-ல் இருந்து 5 வரை 5¼ அங். (1/6 ஸ்கேல்+¼ அங்.)

8-ல் இருந்து 0 வரை 10½ ,, (¼ இடுப்புச் சுற்றளவு+3 அங்.)

9-ல் இருந்து 5 வரை 6 அங். (1/3 ஸ்கேல் அளவு)

10-ல் இருந்து 1 வரை 14 ,,

11-ல் இருந்து 10 வரை 3 அங். (முன்னங்கால் மடிப்பு)

12-ல் இருந்து 8 வரை 4 ,, (முதல் பிளீட்)

13-ல் இருந்து 0 வரை 3¼ ,, (12, 0 எண்ணுக்கும் உள்ள அளவில் பாதி)



14-ல் இருந்து 5 வரை 1·5/8 அங், (7, 5 எண்ணுக்கும் உள்ள அளவில்பாதி)

ஒவ்வொரு எண்ணேயும் படத்தில் உள்ளபடி இணைத்து முன்பக்கத்தை கோட்டின்மீது வெட்டவும்.

முன்பக்கத்தை ஆதாரமாகக் கொண்டுதான் பின் பக்கத்தை வெட்டவேண்டும்.

(தொடரும்)

Regd. No. M 6296

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்-ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர்: வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!

மதமும் மூடநம்பிக்கையும்

[இங்கர்சால்]

தமிழ்த்தமுவல் ஆசிரியர்

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

விலை ரு. 1

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் அஞ்சல்

திருச்சி.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St. Mannadi, MADRA